1926 முதல் திருமண பட்டு புடவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
காஞ்சிபுரம்
Since 1926
பச்சையப்பாஸ்
சில்க்ஸ்
சென்னை * காஞ்சிபுரம் * வேலூர் * திருவண்ணாமலை

RNI.Reg.No.TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்

Ullatchi Saral

* சென்னை * மதுரை

உள்ளாட்சியே இந்தியாவின் நாடித்துடிப்பு

காலை நாளிதழ்

சென்னை உள்ளாட்சி : 6 சாரல் : 121 06.09.2024 வெள்ளிக்கிழமை ஆசிரியர்: M.காளியம்மாள் ullatchisaral@gmail.com பக்கம் : 8 விலை ரூ.4

# "தமிழக அரசுப் பள்ளிகளில் கல்வித் தரம் மிக மோசமாக உள்ளது"

## ஆளுநர் ஆர்.என்.ரவி வேதனை



சென்னை, செப்.06:

தமிழக அரசு பள்ளிகளில் கல்வித்தரம் மிக மோசமாக உள்ளது என்றும், தமிழகத்தின் கல்வித்தரம் தேசிய சராசரியைவிட கீழே போய்விட்டது என்றும் ஆளுநர் ஆர்.என். ரவி வேதனை தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற 'எண்ணித் துணிக' நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்துரையாடல் நடத்தினார்.

பின்னர் பேசிய ஆளுநர் ஆர்.என். ரவி, "நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல நாடுகள், பல ராஜாக்கள் இருந்தாலும் மக்கள் ஒற்றுமை உணர்வுடன் வாழ்ந்துள்ளார்கள். 120 ஆண்டுகளுக்கு முன் எனது பாட்டி, பிஹாரின் ஒரு கிராமத்தில் இருந்து பல நாடுகளைக் கடந்து ராமேஸ்வரத்துக்கு வந்துள்ளார். காரணம், ராமேஸ்வரம் தன்னுடையது, ஒவ்வொருவருக்குமானது என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. அப்படித்தான் பல புண்ணிய தலங்கள் நாடு முழுவதும் உள்ளன.

ராமேஸ்வரம், ராமநாதபுரம் மன்னருக்கானது அல்ல. அது பாரதம் முழுவதும் வசிக்கும் மக்களுக்கானது. ராஜாக்கள், அவற்றின் பாதுகாவலர்கள் மட்டுமே. இதேபோல் தான் காசியும்.

இப்படித்தான் இந்த நாடு ஒரே நாடாகவும், அதேநேரத்தில் பல ராஜாக்கள் ஆளக்கூடியதாகவும் இருந்துள்ளது. பக்திக்காக மட்டுமல்ல, கல்விக்காகவும் ஒரு இடத்தில் இருந்து மக்கள் வேறு ஒரு இடத்துக்குச் சென்று வந்தார்கள்.

1,500 ஆண்டுகளுக்கு முன், பல்லவ இளவரசர் 500 பேருடன் பிஹாரின் நாளாந்தா சென்றார். அங்கு கல்வி பயின்றார். பின்னர், அவரே ஒரு குருவாக உருவெடுத்தார். அவரே போதி தர்மரானார். யாரும் யாரையும் தடுக்கவில்லை. நீங்கள் வேறு ஒரு நாட்டைச் சேர்ந்தவர் என கூறவில்லை. பல்லவ இளவரசர் மாமல்லபுரத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் நாளந்தா தன்னுடையது என்று எண்ணினார்.

அதேபோல்தான் ஆதி சங்கரர். நினைத்துப் பாருங்கள் அவர் நாடு முழுவதும் பயணித்திருக்கிறார். ஒருவரும் அவரை தடுத்ததில்லை. சமூகம் அவரை வரவேற்றது. மக்கள் வரவேற்றார்கள். தற்போதைய அரசியலைக் கொண்டு இந்தியாவை புரிந்துகொள்ள முடியாது. இது ஒரு ராஷ்ட்ரம். ராஷ்ட்ரம் என்பது நாடு என்பதை கடந்த ஒன்று.

கல்விதான் மனிதர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. தமிழகம் கல்வியில் சிறந்து விளங்க மிகச்சிறந்த அடித்தளம் அமைத்தவர் முன்னாள் முதல்வர் காமராஜர். அவர் தான் மாநிலத்தின் பல பகுதிகளிலும் பள்ளிகளை அமைத்தார். தொலைதூரம் சென்று கல்வி கற்கும் நிலையை மாற்றினார்.

துரதிருஷ்டவசமாக அந்த அடித்தளம் இன்று பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு பள்ளிகளில்தான் 60% மாணவர்கள் படிக்கிறார்கள். அரசு பள்ளிகளில் கல்வித் தரம் மிகவும் கீழே சென்றுள்ளது. தேசிய சராசரியைவிட அது குறைவாக உள்ளது.

அரசுப் பள்ளிகளில் 9ம் வகுப்பு படிக்கும் மாணவர்களில் 75% மாணவர்களால், இரட்டை இலக்க எண்களைக்கூட புரிந்து கொள்ள முடியவில்லை. 40% மாணவர்களால் அவர்களது பாடப்புத்தகங்களைக்கூட படிக்க முடியவில்லை. ஒரு ஆய்வு இதனை தெரிவிக்கிறது. கற்பித்தல் குறைபாடே இதற்குக் காரணம். ஆனால், எந்த கட்டுப்பாடும் இல்லாமல் அனைவருக்கும் தேர்ச்சி வழங்கப்படுகிறது. அவர்கள் பட்டப்படிப்பு படித்து முடிக்கிறார்கள். இது நாட்டுக்கு ஆபத்தான நிலையை ஏற்படுத்தக்கூடியது. சான்றிதழ்களை வைத்துக்கொண்டு பல இளைஞர்கள் வேலை கிடைக்காமல் தவிக்கிறார்கள். கல்வியில் ஏற்பட்டிருக்கும் இந்த பின்னடைவை நாம் மறுக்க முடியாது.

தமிழ்நாடு சந்தித்து வரும் மற்றொரு பெரிய பிரச்சனை போதைப் பொருள்கள். ஆனால், போதைப் பொருள்கள் பெரிய பிரச்சினை இல்லை என்று மறுக்கக்கூடிய நிலை இங்கே இருக்கிறது. கோகெய்ன், ஹெராயின், மெத் என ரசாயண போதைப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்துவருகிறது. பள்ளிகள், கல்லூரிகளில் இத்தகைய போதைப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதனை நாம் மறுப்பதால் பயனில்லை. இது நடக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு, இதற்கு தீர்வு காண வேண்டும். ஆசிரிய சமூகம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். மாணவர்கள் தவறான பாதையில் சென்றால், அது குறித்து பெற்றோர்களுக்கு தெரிவிக்க வேண்டும். ஆசிரியர் தினம் இதற்கான உறுதியை எடுப்பதற்கானதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், மணவர்களுக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடும்.

மாணவர்களை பெரிதாக கனவு காண வைக்க வேண்டும். இதற்கான பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்க வேண்டும். பல மாணவர்களிடம் பெரிய கனவுகள் இல்லை. தங்கப் பதக்கம் வென்ற மாணவர்கள்கூட, சராசரி வேலை குறித்த கனவையே கொண்டிருக்கிறார். பலரின் கனவுகள் சிறியதாக உள்ளன.

ஆலமரத்தின் விதையைப் போன்றவர்கள் மாணவர்கள். ஆனால், பலர் அதனை உணராமல் போய்விடுகிறார்கள்" என தெரிவித்தார்.

# "சுயமாக சிந்திக்க வைக்கும் கல்விதான் சிறந்தது"

## மாநில நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில் உதயநிதி பேச்சு




வண்டலூர், செப்.06:

"மாணவர்களை சுயமாக சிந்திக்க வைக்கும் கல்விதான் சிறந்த கல்வி. அந்த வகையில் பார்த்தால், இந்தியாவிலேயே தமிழகத்தின் கல்விதான் சிறந்த கல்வி. தமிழகத்தின் பாடத்திட்டத்தை படித்த பலர் விஞ்ஞானிகளாக, மருத்துவர்களாக உள்ளனர். சிலர் இதை பொறுத்துக்கொள்ள முடியாமல், வயிற்று எரிச்சலில் உள்ளனர்." என்று தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக பள்ளிக் கல்வித் துறை சார்பில் இந்த ஆண்டுக்கான ஆசிரியர் தின விழா வண்டலூரில் உள்ள பி.எஸ். அப்துர் ரகுமான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு 375 ஆசிரியர்கள்களுக்கு டாக்டர். இராதாகிருஷ்ணன் விருதினை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: "இன்று விருதுபெறும் அத்தனை ஆசிரியர்களுக்கும் ஒரு மாணவனாக எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர் பணி என்பது மற்ற பணிகளைப் போல கிடையாது. ஒரு தலைமுறையை உருவாக்கும் அறப்பணி. கல்வி வழங்கும் உன்னதமான பணியைத் தான் ஆசிரியர்களாகிய நீங்கள் செய்து வருகிறீர்கள். வழக்கமாக மாணவர்கள் தான் ஆசிரியர்களிடம் வெரி குட் வாங்குவார்கள்.

ஆனால் இன்று, சிறப்பாக தங்கள் பணிகளை செய்தமைக்காக ஆசிரியர்களாகிய நீங்கள் வெரி குட் பெற்று இந்த விருதினை பெற்றுள்ளீர்கள். ஒரு வகையில் பார்த்தால் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அனைவருமே ஆசிரியர்கள் தான். தமிழர்களுக்கு மானம், அறிவு ஆகியவற்றை புகட்டியதால் தான் தந்தை பெரியாரை நாம் இன்றும் 'அறிவு ஆசான்' என்று அழைக்கின்றோம். அறிவோடு சேர்த்து மானத்தையும் சொல்லிக் கொடுத்தவர் தந்தை பெரியார் மட்டுமே. பகுத்தறிவுக் கொள்கைகளை எளிதில் புரியும் வகையில் மக்களுக்கு எடுத்துக் கூறியவர் பெரியார்.

மாணவர்களை சுயமாக சிந்திக்க வைக்கும் கல்விதான் சிறந்த கல்வி. அந்த வகையில் பார்த்தால், இந்தியாவிலேயே தமிழகத்தின் கல்விதான் சிறந்த கல்வி. தமிழகத்தின் பாடத்திட்டத்தை படித்த பலர் விஞ்ஞானிகளாக, மருத்துவர்களாக உள்ளனர்.

சிலர் இதை பொறுத்துக்கொள்ள முடியாமல், வயிற்று எரிச்சலில் உள்ளனர். அதேபோல ஆரம்ப காலகட்டத்தில் பள்ளி ஆசிரியராக இருந்து கொண்டு, தனது பொதுவாழ்வை தொடங்கியவர் அறிஞர் அண்ணா.

கருணாநிதியின் முதல் பணியே ஆசிரிய பணி தான் காலநேசன், முரசொலி ஆகிய நாளிதழ்களில் ஆசிரியராக தனது பணியை தொடங்கியவர். அதனால் தான் நமது திமுகவுக்கு ஆசிரியர்கள் மேல் எப்போதும் ஒரு தனி பற்று உண்டு.

நமது தமிழக முதல்வர்கூட அதனால் தான் ஆசிரியர்களிடத்தில் தனி கவனம் செலுத்தி வருகிறார். அதனால் தான் தமிழக பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் இந்தியாவுக்கே முன்னோடி திட்டமாக அமைந்தது. இதன் மூலம் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் தற்போது பயன் அடைந்து வருகின்றனர்.

தற்போது ஒரு படி மேலே சென்று, அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேரும் பெண்கள் பயன்பெறும் வகையில் 'புதுமைப்பெண் திட்டம்' கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்களுக்கு மாதம்தோறும் 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் மூன்று லட்சம் பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஆகஸ்ட் மாதம் முதல், 'தமிழ்ப் புலவன்' என்ற திட்டத்தின் மூலம், அரசுப் பள்ளிகளில் படித்து உயர் கல்வியில் சேரும் ஆண்களுக்கு மாதம்தோறும் 1000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 3 லட்சத்து 75 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இன்று அரசுப் பள்ளியில் படித்த எத்தனையோ மாணவ மாணவியர் இஸ்ரோ போன்ற இடங்களில் உயர் பதவிகளை வகிக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம், ஆசிரியராக நீங்கள் தான். தற்போது நமது தமிழக அரசு சார்பில் முதன் முதலாக வெளிநாடு செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களின் முழு செலவையும் அரசே ஏற்கும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

மனிதர்களுக்கு மட்டுமே சிந்திக்கின்ற திறமை உள்ளது. அந்த சிந்தனையை தூண்டு கின்ற ஆற்றல் ஆசிரியர்களிடம் மட்டுமே உள்ளது. ஆரோக்கியமான மாணவனால் மட்டுமே நன்றாக படிக்க முடியும்.

ஆரோக்கியம் காக்க நன்றாக விளையாட வேண்டும். அதனால் தயவு செய்து விளையாட்டு பாடவேளை களை மட்டும் ஆசிரியர்கள் கடன் கேட்காதீர்கள்.

ஆசிரியர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தமிழக முதல்வர் தனிக் கவனம் செலுத்தி பரிசீலித்து வருகிறார். அவை அனைத்தும் விரைவில் நிறைவேற்றித் தரப்படும்." இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில், "ஓயாமல் நமக்காக உழைத்துக்கொண்டிருந்தவர் ஓய்வெடுக்கச் சென்றாலும், நமக்காக ஓயாமல் உழைக்கக் கூடிய இருவரை விட்டுச்சென்றார்.

தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தான் அது. தத்துவவியலாளர் பிளாட்டோவின் கூற்றுப்படி இரண்டு கால் உள்ள விலங்குக்கு கல்வி கொடுத்து அவனை மனிதன் ஆக்குபவர்கள் தான் ஆசிரியர்கள். ஒவ்வொரு மதத்துக்கும் ஒவ்வொரு திருநாள் உண்டு.

அவரவருக்கு என்று கடவுள்கள் உண்டு. ஆனால் அனைத்து மதத்தினருக்கும், அனைத்து மனிதர்களுக்கும் கடவுள் என்றால் அது ஆசிரியர்கள்தான். அனைத்து மதத்தினரும் கொண்டாடப்பட வேண்டிய திருவிழா இந்த ஆசிரியர்கள் தினம்தான். ஆசிரியர்களாகிய நீங்கள் இல்லையெனில் இந்த உலகம் கிடையாது. நீங்கள் இல்லையெனில் இந்த உலகம் இயங்காது என்பது மிகையில்லாத உண்மை.

'உணவு இல்லாதவனுக்கு உணவும். உடை இல்லாதவனுக்கு உடையும். வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அது போல கல்விக் கிடைக்காதவனுக்கு கல்விக் கொடுக்கப்பட வேண்டியது அவசியம்' என்கிறார் தந்தை பெரியார். இந்த நான்கு அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான திட்டங்களை முதல்வர் நிறைவேற்றி வருகின்றார்.

'நம்முடைய மொழியை நாம் கண் போலக் காத்து வருகின்றோம். அந்தக் கண்ணில் சிறு எரிச்சல் உண்டானால்கூட உடல் முழுவதும் எரிச்சல் ஏற்படுவது போல இருக்கும். அந்தக் கண்ணுக்கு மையிடுவதைப் போல பிறமொழிகளைப் பயன்படுத்த வேண்டும்.

அந்த மையை திணிக்கக்கூடாது. வேண்டுமென்றால் மட்டுமே மொழி என்னும் கண்ணுக்கு மையிட வேண்டும். அந்த மை அதிகமானால் கண்ணை எப்படி எரித்துவிடுமோ, அதுபோல பிற மொழிகள் திணிக்கப்படும் போது ஆபத்து அதிகமாகும். இதை மத்திய அரசிலுள்ள தலைவர்கள் உணர்வார்கள்" என்று அவர் பேசினார்.

தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற இவ்விருது வழங்கும் விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழக குழு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மக்களவை உறுப்பினர் செல்வம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, வரலட்சுமி, எழிலரசன், சுந்தர் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி ஆகியோர் கலந்து கொண்டனர்.



பரமக்குடிக்கு மதிமுக கட்சி உறுப்பினர் இல்ல திருமண நிகழ்ச்சிக்கு வருகை தந்த மதிமுக கட்சியின் முதன்மைச் செயலாளரும் பாராளுமன்ற எம்.பி.துரை. வைகோ.நிருபர்களுக்கு பேட்டியளித்தார் .ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு வருகை தந்த துரை. வைகோவின்.எம்.பி.க்கு வழி நெடுக கட்டவுட்பேனர்களும் வரும்வழியில்கட்சிக்கொடி பேனர்களும் வைத்து வரவேற்று பரமக்குடி துணை சேர்மன் குணா என்ற குணசேகரன் பரமக்குடிநகர் மன்ற துணைத் தலைவர் குணா என்ற குணசேகரன்..முன்னதாக சிறப்பாக வரவேற்பு அளித்தார்.

நாகர்கோவில் டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை சார்பாக

# 30-வது தேசிய கண் தான விழிப்புணர்வு மனித சங்கிலி




நாகர்கோவில்,செப்.06: ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 8 வரை தேசிய அளவில், கண் மருத்துவமனை களும், அதனை சார்ந்த கண் வங்கிகளும் கண் தான விழிப்புணர்வு வாரமாக கடைப்பிடித்து வருகிறது நாகர்கோவில் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை முன்பாக மாணவ மாணவியர்கள் மற்றும் 500 பேருக்கு மேற்பட்டோர் பெரும் திரளாக கலந்துகொண்டு மாபெரும் கண்தான விழிப்புணர்வு மனித சங்கிலி நடத்தினர். இந்நிகழ்வில்

தலைமை விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி சுகாதார அலுவலகர் டாக்டர் ராம்குமார் மற்றும் கோபால் சுரேந்திரன் மருத்துவ சேவைகள் கிம்ஸ் ஹெல்த் – தலைவர் ஆதர்ஷ் வித்யா கேந்திரா பள்ளி மற்றும் ஸ்ரீ ஐயப்பா கல்லூரி மகளிர் கலந்து கொண்டு விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, மனித சங்கிலியை தொடங்கி வைத்து பேசினார்கள். நாகர்கோவில் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் சிரில் ஜோஸ் அவர்கள் மற்றும் முதன்மை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஐஸ்வர்யா தேவி கண் தானம் செய்வதின் அவசியத்தை குறித்தும் உலக அளவில் கருவிழி பார்வை இழப்பு தடுப்பதை குறித்தும் விரிவாக பேசினார்கள். நமது மருத்துவமனையில் உலக தரத்தில் தையல் இல்லா கருவிழி மாற்று அறுவை சிகிச்சை நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களுடன் உதவியுடன் செய்யப்படுகிறது என்பதையும் மேற்கோள் காட்டினார்கள் மனித சங்கிலியில், நாகர்கோவில் ஆதர்ஷ் வித்யா கேந்திராபள்ளி மற்றும் நாகர்கோவில் ஸ்ரீ ஐயப்பா பெண்கள் கல்லூரி மாணவ, மாணவியர்கள், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும் விழிப்புணர்வு வாசகங்களை கூறியும் மனித சங்கிலியில் பங்கேற்றனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை மேலாளர் வெங்கடேஷ் மற்றும் மருத்துவமனை மருத்துவர்கள் , ஊழியர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 153வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு ஒட்டப்பிடாரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம். சண்முகையா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் எல்.ரமேஷ், வ.உ.சிதம்பரனார் அவர்களின் வாரிசுதார் உ.செல்வி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் உள்ள தி லிட்டில் பிளவர் பள்ளியில் ஆசிரியர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளியின் தலைவர் ஹென்றி அருளானந்தம் தலைமை தாங்கினார். பள்ளியின் தாளாளர் தமயந்தி முன்னிலை வகித்தார் .பள்ளியின் முதல்வர் உமா மகேஸ்வரி வரவேற்று பேசி சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக தேசிய விருது பெற்ற ஓய்வு ஆசிரியர் தில்லை நடராஜன் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கி விழா சிறப்புரையாற்றினார். பள்ளியின் செயலர் மாத்யூ ஜோயல் வாழ்த்துரை வழங்கினார். விழாவில் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது .மாணவர்களும் ஆசிரியர் தின விழாவில் சிறப்புரையாற்றினார்கள். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஆசிரியர்கள் பூமா ,கவிதா, பாண்டிச் செல்வி, ராகினி, ,திவ்யா ஆகியோர் செய்து இருந்தனர்.

உங்கள் நறுமணத்தை மங்கச் செய்யாதது:

# நாள் முழுவதும் புதிய வாசனையைப் பெற எளிய குறிப்புகள்

சென்னை,செப்.06: நீடித்த தோற்றத்தை ஏற்படுத்தும் நறுமணத்துடன் தலையை மாற்றத் தயாரா? இந்தியாவின் சுறுசுறுப்பான வேகத்திற்கும் தீவிர வானிலைக்கும் இடையில், உங்கள் வாசனையை வலுவாக வைத்திருப்பது ஒரு சவாலாக இருக்கலாம். ஆனால் உங்கள் நறுமண விளையாட்டை எதுவும் குறைக்க வேண்டாம். விடியலின் முதல் கதிர்கள் முதல் அந்தி சாயும் வரை உங்களுடன் இருக்கும் வசீகரமான நறுமணத்தைத் திறக்க, உள் ரகசியங்களை

உங்களுக்கு வழங்க நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

1) உங்கள் நறுமணத்தை அடுக்கி வைக்கவும்: அடுக்குகள் நீண்ட கால வாசனையின் ரகசியம். வாசனையுள்ள பாடி வாஷ் அல்லது ஷவர் ஜெல்லுடன் தொடங்கவும், அதைத் தொடர்ந்து வாசனையுள்ள பாடி லோஷனைப் பயன்படுத்தவும். இது ஒரு நறுமணத் தளத்தை உருவாக்குகிறது, இது உங்கள் வாசனை திரவியம் உங்கள் சருமத்தில் சிறப்பாக ஒட்டிக்கொள்ள உதவுகிறது, மேலும் ஈரப்பதமாகவும் இருக்கும். நீங்கள் இறுதியாக உங்கள் வாசனை திரவியத்தை தெளிக்கும்போது, நறுமணம் மிகவும் உச்சரிக்கப்படும் மற்றும் நீடித்திருக்கும்.

2) உங்கள் துடிப்பு புள்ளிகளை இலக்காகக் கொள்ளுங்கள்: உங்கள் வாசனை திரவியத்தின் நீண்ட ஆயுளை அதிகரிக்க, அதை உங்கள் பல்ஸ் புள்ளிகளுக்குப் பயன்படுத்துங்கள்உங்கள் தோல் இயற்கையாகவே வெப்பமாக இருக்கும் மற்றும் நறுமணத்தை மிகவும் திறம்பட பரப்ப முடியும். இதில் உங்கள் மணிக்கட்டு, கழுத்து, காதுகளுக்குப் பின்னால், முழங்கையின் உட்புறம் ஆகியவை அடங்கும். உங்கள் தலைமுடியில் ஒரு லேசான மூடுபனி நீங்கள் நகரும் போது உங்கள் மகிழ்ச்சியான வாசனையை விட்டுச் செல்வதை உறுதிசெய்யும். 3) தேவைக்கேற்ப மீண்டும் விண்ணப்பிக்கவும்: கடைசியாக, தேவைப்படும்போது உங்கள் வாசனை திரவியத்தை மீண்டும் பயன்படுத்த தயங்காதீர்கள். விரைவான ஸ்பிரிட்ஸ் உங்கள் வாசனையை புத்துணர்ச்சியடையச் செய்து உங்களை புத்துணர்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் உணர வைக்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களை அதிகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, குறைவாகவே விண்ணப்பிக்கவும்.

4) சரியான வாசனையைத் தேர்ந்தெடுங்கள்: ஒரு மயக்கும் வாசனைக்கான பயணம் சரியான வாசனைத் திரவியத்தைத் தேர்ந்தெடுப்பதில் தொடங்குகிறது. உங்கள் ஆளுமையை பூர்த்தி செய்யும் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வாசனையைப் பயன்படுத்துங்கள். புத்துணர்ச்சியூட்டும் மற்றும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்திற்கு, ITC Engage l'amante Aqua ஐ முயற்சிக்கவும், இது புதிய வாசனையைக் கொண்டுள்ளது, மேலும் அதன் பச்சை லாவெண்டர் குறிப்புகள் நாள் முழுவதும் உங்களை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க ஏற்றதாக இருக்கும். வாசனை நிபுணர் நிகிதா டும்பானியின் கூற்றுப்படி, வாசனை திரவியத்தின் நீண்ட ஆயுளுக்கு வெவ்வேறு வாசனை குறிப்புகளைப் புரிந்துகொள்வது முக்கியம்.

இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் மற்றும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட்

# அகமதாபாத் 2024க்கான லிங்க்ட்இன் டாப் எம்பிஏ பட்டியலில் இடம்பெற்றுள்ளது

LinkedIn

சென்னை,செப்.06: தொழில் வல்லுநர் கள் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளவும், அவர்களின் தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் உதவும் வகையில், உலகின் மிகப் பெரிய தொழில்முறை நெட்வொர்க்கான LinkedIn, சிறந்த வணிகப் பள்ளிகளைக் கண்டறிந்து தொழில் வல்லுநர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த உதவும் வகையில் சிறந்த 20 விஙிகி திட்டங்களின் பட்டியலைத் தொடங்கியுள்ளது.

இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் (#6) மற்றும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட், அகமதாபாத் (#19) ஆகியவை முதல் 20 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன. ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகம், உலகளாவிய பட்டியலில் முன்னணியில் உள்ளது, இன்ஸ்டிட்யூட் யூரோபீன் டி அட்மினிஸ்ட்ரேஷன் டெஸ் அஃபையர்ஸ் (INSEAD) பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக் கழகம் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன. வேலை வாய்ப்பு, முன்னேறும் திறன், நெட்வொர்க் வலிமை, தலைமைத்துவ சாத்தியம் மற்றும் பாலின வேறுபாடு உள்ளிட்ட ஐந்து முக்கிய தூண்களில் ஒவ்வொரு திட்டத்தையும் பட்டியல் மதிப்பிடுகிறது.

லிங்க்ட்இன் நியூஸ் இந்தியாவின் மூத்த நிர்வாக ஆசிரியர் மற்றும் தொழில் நிபுணரான நிரஜிதா பானர்ஜி கூறுகையில், "தலைமைப் பாத்திரங்களை இலக்காகக் கொண்டாலும், புதிய தொழில்களை ஆராய்வதாயினும் அல்லது சொந்தத் தொழிலைத் தொடங்கினாலும், தொழில் முனைவோர்களுக்கு விஙிகி ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும். . பட்டம் பெறுவதற்கு அப்பால், மூலோபாய சிந்தனை, தலைமைத்துவம் மற்றும் சிக்கலைத் தீர்ப்பது போன்ற தேவைக்கேற்ப மென்மையான திறன்களை வளர்த்துக் கொள்ள இது ஒரு வாய்ப்பாகும் பட்டப் படிப்புக்குப் பிறகு நீண்ட காலத்திற்குப் பிறகு புதிய வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறக்கும் இணைப்புகளை உருவாக்கும்போது. லிங்க்ட்இனின் சிறந்த எம்பிஏ பட்டியல் ஆர்வமுள்ள தொழில் வல்லுநர்களுக்கு சரியான பொருத்தத்தைக் கண்டறிய உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது,

**வாகனம் ஓட்டும் போது கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும்**

## ...வர்த்தக செய்திகள்...

# 1000-வது கிளையை திறந்து எஸ்எம்எஃப்ஜி மைல்கல் சாதனை



மதுரை,செப்.06: எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட், நவி மும்பையில் வாஷியில் அமைந்திருக் கும் தனது 1000மாவது கிளையை திறப்பதை பெருமையுடன் அறிவிக்கிறது. இந்த முக்கிய மைல் கல்லை குறிக்கும் வகையில், எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட், ஒரு சிறப்பு கவர் மற்றும் மை ஸ்டாம்ப் வெளியிட இந்திய அஞ்சல் துறையுடன் கூட்டாக இணைந்திருக்கிறது. இதன் அதிகார பூர்வமான வெளியீட்டு விழா, எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் ஷாந்தனு மித்ராவுடன் இணைந்து மும்பையில் உள்ள ஜப்பானிய துணைத் தூதரகத்தின் துணைத் தூதர், யாகி கோஜி, இந்திய அஞ்சல் துறையின் மகாராஷ்டிர தலைமையக வட்டத்தின் நிறுவனர் அபிஜித் பன்சோடே, போன்றோரின் வருகை யால் சிறப்பிக்கப்பட்டது.

பெரிய மற்றும் பன்முகத் தன்மை வாய்ந்த இந்திய சந்தையில் தங்கள் இருப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கான எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட்டின் தொலைநோக்கு பார்வைக்கு அதன் 1000 மாவது கிளை தொடக்கம் ஒரு சான்றாகும். நிறுவனம் இப்போது 670 நகரங்கள் மற்றும் 70,000 கிராமங்களில் 23,000 த்திற்கும் மேலான ஊழியர்களின் ஆதரவோடு இயங்கி வரும் இந்தியா முழுவதும் பரவியுள்ள ஒரு நிறுவனமாக பரிணமித்துள்ளது. இந்த மைல்கல் நிறுவனத்தின் வெற்றிக்கான வளர்ச்சி உத்தியை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல், இந்திய நிதிச் சேவைத் துறையில் ஒரு முக்கிய பங்களிப்பாளராக உறுதிப்படுத்துகிறது எஸ்எம்எஃப்ஜி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அறிவுசார் சொத்துரிமைகளுக்கான எல்லைகளை மீறியதற்காக

# குபோடாவின் கிளை நிறுவனமான கைரா நிறுவனம் மீது தொடரப்பட்ட வழக்கில் இடைக்கால நிவாரணம்

## டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

சென்னை,செப்.06: விவசாயத்துக்கான உபகரண பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்றான ஜப்பானிய கொபோடா நிறுவனம், கைரா என்ற நிறுவனத்துடன் கூட்டு வைத்திருந்தது. சென்னையை சேர்ந்த விவசாய உபகரண நிறுவனமான கைரா அக்ரோஸ், தனது அறிவுசார் சொத்துரிமையை தவறாக பயன்படுத்தியதாகவும், எதிரி உள்ளதாகவும் டெல்லி உயர் நீதிமன்றத்தில் குபோடோ நிறுவனம் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

குபோடா நிறுவனத்தால் தொடரப்பட்ட IPR நிறுவனங்களில் ஒன்றான கைரா, ஜப்பானிய ரகசிய தகவல்கள், மற்றும் தொழில்துறை சார்ந்த வரைபடங்களை தனது எல்லை கட்டுப்பாட்டிற்கு மீறி கடந்து சென்றது மற்றும் நேர்மையற்ற முறையில் தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது.

கைரா மற்றும் சிலருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இந்த வழக்கில் நிறுவனத்தின் பெயரை பயன்படுத்துவதற்கு தடை செய்ததோடு மட்டுமல்லாமல், ஜப்பானிய நிர்வாணமான குபோடாவை மீறுவதாக கருதி அதை பயன்படுத்துவதில் இருந்து தடையும் விதிக்கப்பட்டது. மேலும் கைரா நிறுவனத்தின் தயாரிப்பு பட்டிகளை குபோடா உடன் ஒப்பிட்டு பார்த்து, மேலும் அறிவு சார் சொத்துரிமையை மீறியதாகவும், பதிப்புரிமை மீறலுக்கு துணை போனதாகவும் கைரா நிறுவனம் குற்றவாளி என தீர்ப்பளித்தது. அதோடு மட்டுமல்லாமல் உரிய நேரத்துக்குள் கிடைக்காத நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் தனது உத்தரவில் தெரிவித்திருந்தது. ஜப்பானின் குபோடா நிறுவனம் இந்த வழக்கில் கூடுதல் உரிமைக் குரல்களை முன் வைத்துள்ளது. அதில் அரிசி மாற்று இயந்திரங்கள், மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்களில் வடிவமைப்பு, வண்ணக் கலைவகைகள், வர்த்தக ஆடைகளை நகல் எடுப்பதற்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு வருகிற செப்டம்பர் மாதத்தில் மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது குறிப்பிடத் தக்கது.

இந்துஸ்தான் கோகோ கோலா பானங்கள் (HCCB)

# தூத்துக்குடியில் பெண்களுக்கு புதிய பயிற்சி முயற்சியுடன் அதிகாரம் அளிக்கிறது



தூத்துக்குடி,செப்.06: தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி FMCG நிறுவனங்களில் ஒன்றான HCCB, Y4D அறக்கட்டளையுடன் இணைந்து, தூத்துக்குடியில் உள்ள உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு அதிகாரம் அளிக்க தையல் பயிற்சிப் பிரிவைச் செயல்படுத்தியுள்ளது. ஸ்ரீமதி. பி. கீதா ஜீவன் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முன்னிலையில் துவக்கி வைத்தார். இந்த முயற்சி 40 பெண்களை சிறப்பு தையல் திறன் கொண்டவர்களாகவும், பொருளாதார சுதந்திரம் மற்றும் தொழில்முறை வளர்ச்சியை அடைய வும் உதவுவதை நோக்க மாகக் கொண்டுள்ளது.

தையல் பயிற்சி பிரிவு என்பது ஒரு விரிவான 40 நாள் திட்டமாகும், இது வேலைவாய்ப்புக்கான அத்தியாவசிய திறன்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பங்கேற்பாளர்கள் தங்கள் சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு தொழில் முனைவோர் அறிவையும் வழங்குகிறது. HCCB ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் ஒரு தனிப்பட்ட தையல் இயந்திரத்தை வழங்கும், அதே நேரத்தில் தமிழ்நாடு அரசின் சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை, பொருட்கள் மற்றும் உடனடி வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் உள்ளிட்ட கூடுதல் ஆதரவை வழங்கும்.

தொடக்க விழாவில் பேசிய ஸ்ரீமதி. பி கீதா ஜீவன் சமூக நலன் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை அமைச்சர், HCCB உடனான ஒத்துழைப் பிற்கான தனது உற்சாகத்தை வெளிப்படுத்தினார். தையல் பயிற்சி அலகு முயற்சி நூற்றுக்கணக்கான பெண்களை பாதிக்கும் மற்றும் பிராந்தியத்தில் நேர்மறையான மாற்றத்திற்கு வழி வகுக்கும். இந்த முன்முயற்சி அவர்கள் ஆடை உற்பத்தி அலகுகளில் வேலைகளைப் பெறுவதற்கு அல்லது சிறிய தையல் அலகுகளைத் திறக்க சுய உதவி தொழில் முனைவோர் கடன் களைப் பெறுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும்.

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு

# புளியம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட 60 ஆசிரியர்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் மரியாதை




கிருஷ்ணகிரி, செப்.06

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம் பள்ளி அடுத்த புளியம்பட்டி ஊராட்சிகளில் உள்ள புளியம்பட்டி அரசு மேல் நிலைப்பள்ளி, புளியம்பட்டி அரசு தொடக்கப்பள்ளி, சுண்டகாபட்டி அரசு நடுநிலைப்பள்ளி, வடமலம்பட்டி அரசு தொடக்கப்பள்ளி, கெங்கிநாயக்கன் பட்டி அரசு நடுநிலைப்பள்ளி, மைலம் பட்டி அரசு தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள 60 ஆசிரியர்களுக்கு, செப்டம்பர் 5 ஆசிரியர் தினமான இன்று ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் ஆசிரியர்களுக்கு மரியாதை செய்தார். முன்னதாக புளியம்பட்டி ஊராட்சி செயலகத்திலிருந்து ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து புளியம்பட்டி கிராமத்தின் வழியாக ஊர்வலமாக மேள தாளங்களுடன் அழைத்து சென்று, அரசு மேல் நிலைப்பள்ளி வந்தடைந்தனர்.

பள்ளி வளாகம் முன்பு ஆசிரியர்களுக்கு ஆரத்தி எடுத்து திருஷ்டி கழிக்கப் பட்டது. பள்ளி வளாகத்தில் அனைத்து ஆசிரியர்களுக்கும் மரியாதை செய்யப் பட்டு, நினைவு பரிசுகளை வழங்கினார். அப்போது ஹேப்பி டீச்சர்ஸ் டே என அனைத்து மாணவர்களும் கோஷங்கள் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

பின்னர் கல்வியின் சிறப்பு குறித்தும், சமூக அக்கறை ஆசிரியர்களின் பங்களிப்பு குறித்தும் ஊக்கமளிக்கும் வகையில் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் பேசினார்.

இந்நிகழ்வில் பெற்றோர் ஆசிரியர் கழகதலைவர்ராஜேந்திரன்,புளியம்பட்டி ஊர் கவுண்டர் மணி, எஸ்,எம்.சி. குழு தலைவவி சுவிதா மற்றும் குழு உறுபினர்கள் உள்ளிட்ட கிராமத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒரு ஊராட்சியில் உள்ள அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் ஆசிரியர் தினத்தன்று மரியாதை செய்தது சுற்று வட்டார பகுதிகளில் பேசு பொருளாக மாரியுள்ளது. ,

# அரசு தொழிற் பயிற்சி நிலையம், அரியலூர் பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை 2024

அரியலூர், செப்.06

2024 ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர நேரடி சேர்க்கை (Spot Admission) நடைபெறும் கால அவகாசம் 30.09.2024 வரை நீட்டிக் கப்பட்டு ள்ளது.

பயிற்சியில் சேர விரும்புபவர் தங்களது அசல் கல்வி சான்றிதழ்களுடன் நேரில் வரவும். ஏற்கனவே பயிற்சியாளர்கள் சேர்க்கை நடைபெற்றதில் மீதமுள்ள காலியிடங்களுக்கு மட்டும் முதலில் வருபவருக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடி சேர்க்கை நடைபெறுகிறது.

கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு தேர்ச்சி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி (ம) 12ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி.

விண்ணப்பக்கட்டணம்:

விண்ணப்ப கட்டணத்தொகை ரூ.50/, சேர்க்கை கட்டணம்: ஒரு வருடம் தொழிற்பிரிவு பயிற்சி கட்டணம் ரூ.185/, இரண்டு வருடம் தொழிற்பிரிவு பயிற்சி கட்டணம் ரூ.195/. நேரடி சேர்க்கை (Spot Admission) விண்ணப்பிக்க கடைசி நாள் 30.09.2024

மேலும் விவரங்களுக்கு 1.அரசு தொழிற்பயிற்சி நிலையம், அரியலூர் 9499055877, 04329228408 2. அரசு தொழிற் பயிற்சி நிலையம், ஆண்டிமடம் 9499055879 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தின சாமி, தெரிவித்துள்ளார்.

# தேசிய ஊட்டச்சத்து வாரம் மற்றும் உலக தேங்காய் தினம் கொண்டாடும் விதமாக கருத்தரங்கம் மற்றும் சமையல் போட்டி

திருப்பூர், செப்.06

திருப்பூர், வஞ்சிபாளையம், தீரன் சின்னமலை மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் உணவு, ஊட்டச்சத்து துறை மற்றும் நுண்ணுயிரியல் துறை சார்பாக தேசிய ஊட்டச்சத்து வாரம் மற்றும் உலக தேங்காய் தினம் கொண்டாடும் விதமாக கருத்தரங்கம் மற்றும் சமையல் போட்டி கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி முதல்வர் டாக்டர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்கி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக சூலூர் ஆர் வி எஸ் கல்லூரியின் தேர்வு கட்டுப்பாட்டாளரும், உணவு அறிவியல் மற்றும் ஹோட்டல் மேலாண்மை துறையின் இணை பேராசிரியை டாக்டர் ஜெயலட்சுமி கலந்து கொண்டு உணவு முறையில் வளர்ந்து வரும் போக்குகளை பற்றிய நுண்ணறிவுகள் குறித்தும் மேலும் மாணவர்களை ஆரோக்கியமான வாழ்க்கை பழக்கத்திற்கு ஊக்குவிக்கிறது என்பதை விரிவாக எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் உணவு மற்றும் ஊட்டச்சத்துறை பேராசிரியை ஆதித்யா, மனோ பிரதிஸ்தா, நுண்ணுயிரிகள் துறை உதவி பேராசிரியர் செல்வ ஜெயந்தி ஆகியோர் ஒருங்கிணைத்து செயல்பட்டனர்.

அதே போல் கல்லூரி நுண்ணுயிரிகள் துறை மற்றும் சேவூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் இணைந்து நடத்திய சுகாதார விழிப்புணர்வு முகாம் மற்றும் கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடந்தது. கருத்தரங்கில் மருத்துவ அலுவலர் சக்திவேல் பொது சுகாதாரம் பற்றியும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள வசதி வாய்ப்புகள் பற்றியும், தமிழக அரசின் பல்வேறு மருத்துவ திட்டங்கள் பற்றியும் விரிவாக பேசினார்.

புகையிலை கட்டுப்பாட்டு மைய மாவட்ட ஆலோசகர் டாக்டர் சௌமியா புகையிலையினால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றியும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைகள் சிகிச்சைகள் மற்றும் திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் இயங்கி வரும் புகையிலை கட்டுப்பாட்டு மையம் அளித்து வரும் பல்வேறு சிகிச்சைகள் பற்றியும் கலந்துரையாடினார்.

சமூக சேவகர் பிரிவின் குமார் புகையிலை பழக்கத்தினால் ஏற்படும் நோய்களுக்கான சிகிச்சை முறை பற்றி பேசினார். மருத்துவம் இல்லா மேற்பார்வையாளர் பாஸ்கரன் தொழுநோய் பற்றியும், அதற்கான அறிகுறிகள் சிகிச்சை முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ரமேஷ் டெங்கு




காய்ச்சல் பற்றியும், அது பரவும் முறையும் பற்றியும், அதற்கானபரிசோதனைகள்சிகிச்சை முறைகள் பற்றியும் கூறினார். மேலும் டெங்கு காய்ச்சலின் போது மக்கள் எடுத்துக் கொள்ளும் சுய மருத்துவத்தின் ஆபத்துகள் பற்றியும் எடுத்து கூறினார்.

முறையான பரிசோதனைகள் செய்து கொண்ட மேற்கொண்ட பின்னரே மருந்துகள் உட்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். காசநோய் சுகாதார மேற்பார்வையாளர்கள் விண்ணரசு, ரேவதி ஆகியோர் காச நோயின் தன்மை பற்றியும், அறிகுறிகளையும், அதை வருமுன் காப்பது பற்றியும் எடுத்து கூறினர்.

இக்கருத்தரங்கில் சுகாதார ஆய்வாளர்கள் பரமன், டிஷங்சன், பன்னீர்செல்வம், தரனீஷ் குமார் கல்லூரி பேராசிரியைகள், மாணவிகள் திரளாக கலந்து கொண்டு பயனடைந்தனர். முடிவில் தமிழ் துறை பேராசிரியை காயத்ரி நன்றி கூறினார்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/130/2024**

திருமதி.நிஷா ஜெனிபர்
க/பெ.பாலமுருகன்.
பொற்படாக்குறிச்சி கிராமம்,
கள்ளக்குறிச்சி வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் நிஷா ஜெனிபர் என்கிற நான், எனது தாய் திருமதி. சித்ரா. க/பெ. ஆரோக்கியசாமி என்பவர் கடந்த 24/08/1989 அன்று கள்ளக்குறிச்சி வட்டம், பொற்படாக்குறிச்சி கிராமத்தில் இறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது தாய் திருமதி.சித்ரா. க/பெ. ஆரோக்கியசாமி இறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது தாய் திருமதி.சித்ரா. க/பெ. ஆரோக்கியசாமி இறப்பு சான்றிதழ் கேட்டு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள் ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி.**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/027/2024**

திரு.முத்து செல்வன்
த/பெ.வைத்தி.
லா.கூடலூர் கிராமம்,
வாணாபுரம் வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் முத்து செல்வன் என்கிற நான், எனது தந்தை வழி பாட்டி சின்னப்பொண்ணு. க/பெ.வினையத்தான் என்பவர் கடந்த 20/03/1964 அன்று வாணாபுரம் வட்டம், லா.கூடலூர் கிராமத்தில் இறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது தந்தை வழி பாட்டி சின்னப்பொண்ணு க/பெ. வினையத்தான் இறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது தந்தை வழி பாட்டி சின்னப்பொண்ணு க/பெ. வினையத்தான் இறப்பு சான்றிதழ் கேட்டு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள் ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்ப டும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி.**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/016/2024**

திருமதி.பவுனாம்பாள்
க/பெ.சடையன்.
சோழம்பட்டு கிராமம்,
சங்கராபுரம் வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் பவுனாம்பாள் என்கிற நான், எனது கணவர் சடையன்என்பவர்கடந்த26/01/2010 அன்று சங்கராபுரம் வட்டம், சோழம்பட்டு கிராமத்தில் இறந்தார் என்பதை கவனக்குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது கணவர் சடையன் இறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது கணவர் சடையன் இறப்பு சான்றிதழ் கேட்டு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி.**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/110/2024**

திரு.வீரமுத்து
த/பெ.மலையன்.
மாடூர் கிராமம்,
கள்ளக்குறிச்சி வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் வீரமுத்து என்கிற நான், எனது சகோதரி திருமதி. அமிர்தம். க/பெ. இளங்கோவன் என்பவர் கடந்த 19/05/2004 அன்று கள்ளக்குறிச்சி வட்டம், மாடூர் கிராமத்தில் இறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல்இருந்துவிட்டபடியால் மேற்படி எனது சகோதரி திருமதி. அமிர்தம். க/பெ. இளங்கோவன் இறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது சகோதரி திருமதி.அமிர்தம். க/பெ. இளங்கோவன் இறப்பு சான்றிதழ் கேட்டு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள் ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி.**





குமரன் பிரிண்டர்ஸ்
தினசரி நாளிதழ், வார இதழ், மாத இதழ் குறைந்த விலையில்
தரமான முறையில் அச்சடித்து தரப்படும்.
தொடர்புக்கு
CMDA, Flat No.D28, Terminal complex, Madhavaram,Chennai - 600110.
செல் : 7904165557




உள்ளாட்சி சாரல்
காலை நாளிதழ் உள்ளாட்சி சாரல் நியூஸ் பேப்பரில் ஆட்கள் தேவை,
மணப்பந்தல், ரியல் எஸ்டேட், பைனான்ஸ், ஜோதிடம், மாந்திரிகம், கல்வி, பிறந்த நாள் வாழ்த்து மற்றும் இதர செய்தி போன்ற விளம்பர தொடர்புக்கு
தொடர்புக்கு
8015099090

விளம்பரம்

விவேகம் டிராவல்ஸ்
136, ஜி.சி.ரோடு, தூத்துக்குடி- 628 001
போன்: 0461-2324962
தினசரி காலை 9.30 மணிக்கு சென்னை To கோவை
தினசரி இரவு 10 மணிக்கு சென்னை To தூத்துக்குடி
VOLVO BUS A/C SEATER
கோயம்பேடு: 24795099, 24790789
எக்மோர்: 28193402, 28193432, 28191601
E-Booking: vivegam.in/redbus.in,








**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.353/2024**

விஜயா
க/பெ.நாகப்பன்,
எண்.47,முல்லை நகர்,
மெதூர் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது தகப்பனார்செஞ்சிராமன்த/பெ. ஆரியப்பன் என்பவர் கடந்த 25/11/2018 அன்று எண்31, முல்லை நகர்,மெதூர்,பொன்னேரி என்ற முகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டு விட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**விஜயா**
**மனுதாரர்.**

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.8911511/2024**

ராஜேஸ்வரி
க/பெ அருணாச்சலம் ,
எண்.86, தமிழ் கொரஞ்சூர்,
நெய்தவாயல்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது தாயார் ஈஸ்வரி க/பெ.ஆறுமுகம்,என்பவர்கடந்த12/09/2012 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டு விட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**ராஜேஸ்வரி**
**மனுதாரர்.**

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.365/2024**

கஸ்தூரி
க/பெ .குபேந்திரன்,
எண்.94,மணிவாசகம் தெரு,
கன்னிகைப்பேர், திருவள்ளூர்.
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது கணவர் குபேந்திரன் த/பெ. பரமசிவம், என்பவர் கடந்த 20/07/1984அன்று15,கிராண்ட்லைன் கிராமம்,1/24,ஈ.வே.ரா. பெரியார் தெரு,வடகரை, பொன்னேரி வட்டம்,திருவள்ளூர்மாவட்டம்என்றமுகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டு விட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**கஸ்தூரி**
**மனுதாரர்.**

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.358/2024**

சுந்தரமூர்த்தி
த/பெ காளியப்பன்,
எண்.1/2229, சோலையம்மன் நகர்,8வது தெரு,
காந்தி நகர்,ஆட்டம் தாங்கல்,
சென்னை600052,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது தாயார் லட்சுமியம்மாள் க/பெ காளியப்பன் (லேட்) என்பவர் கடந்த 23/08/2017 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**சுந்தரமூர்த்தி**
**மனுதாரர்.**

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை .**
**கடிதம் எண் அ2/238/2024**

குமார்
த/பெ.கண்ணன்
28 சிவன் கோயில் தெரு
செங்கம் நகரம் &வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் /வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் குமார் என்பவரது தாயார் மல்லிகா 7.10.1977 திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் &நகரம் 28 சிவன் கோயில்தெருஎன்றவிலாசத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**குமார்**
**த/பெ.கண்ணன்**
**28 சிவன் கோயில் தெரு**
**செங்கம் நகரம் &வட்டம்**
**திருவண்ணாமலை மாவட்டம்**

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை .**
**கடிதம் எண் அ2/237/2024**

குமார்
த/பெ.கண்ணன்
28 சிவன் கோயில் தெரு
செங்கம் நகரம் &வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் /வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் குமார் என்பவரது தாத்தா வேலாயுதம் 7.4.1994 திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் &நகரம் 28 சிவன் கோயில் தெரு என்ற விலாசத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்க பட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**குமார்**
**த/பெ.கண்ணன்**
**28 சிவன் கோயில் தெரு**
**செங்கம் நகரம் &வட்டம்**
**திருவண்ணாமலை மாவட்டம்**

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை .**
**கடிதம் எண் அ2/239/2024**

குமார்
த/பெ.கண்ணன்
28 சிவன் கோயில் தெரு
செங்கம் நகரம் &வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் /வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் குமார் என்பவரது பாட்டி அலமேலு 10.10.1992 திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் &நகரம் 28 சிவன் கோயில் தெரு என்ற விலாசத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள்9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**குமார்**
**த/பெ.கண்ணன்**
**28 சிவன் கோயில் தெரு**
**செங்கம் நகரம் &வட்டம்**
**திருவண்ணாமலை மாவட்டம்**

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை .**
**கடிதம் எண் அ2/7316/2023**

மணி
த/பெ.பாலகிருஷ்ணன்
884 வெள்ளக்குளம்
கீக்களூர் புரவடை
கீக்களூர் கிராமம்
கீழ்பெண்ணாத்தூர் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் /வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் மணி என்பவரது தந்தை பாலகிருஷ்ணன் 6.6.1975 திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூர் வட்டம் கீக்களூர் புரவடை கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்க பட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**மணி**
**த/பெ.பாலகிருஷ்ணன்**
**884 வெள்ளக்குளம்**
**கீக்களூர் புரவடை**
**கீக்களூர் கிராமம்**
**கீழ்பெண்ணாத்தூர் வட்டம்**
**திருவண்ணாமலை மாவட்டம்**

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை .**
**கடிதம் எண் அ2/10812/2022**

முனியப்பன்
த/பெ துரைசாமி
கல்லாயிசொரத்தூர் கிராமம்
கீழ்பெண்ணாத்தூர் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் /வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் முனியப்பன் என்பவரது தந்தை துரைசாமி 31.1.1998 திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூர் வட்டம் கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**முனியப்பன்**
**த/பெ.துரைசாமி**
**கல்லாயிசொரத்தூர் கிராமம்**
**கீழ்பெண்ணாத்தூர் வட்டம்**
**திருவண்ணாமலை மாவட்டம்**

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை .**
**கடிதம் எண் அ2/2238/2024**

சு.குருசாமி
த/பெ.சுகதேவன்
11 பேகோபுரம் 1 வது தெரு
தென்மாத்தூர் கிராமம்
திருவண்ணாமலை வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் /வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் குருசாமி என்பவர் 29.8.2005 திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் தென்மாத்தூர் கிராமத்தில் பிறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 18.6.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**சு.குருசாமி**
**த/பெ.சுகதேவன்**
**11 பேகோபுரம் 1 வது தெரு**
**தென்மாத்தூர் கிராமம்**
**திருவண்ணாமலை வட்டம்**
**திருவண்ணாமலை மாவட்டம்**



சுரண்டை எஸ் ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் எஸ்.ஆர். மிராக்கிள் போட்டி நடந்தது. இதில் சுரண்டை ராஜேந்திரா விஸ்டம் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளனர். இம்மாணவர்கள் இணைப்பு கலை போட்டியில் இரண்டாம் இடமும், வண்ணம் தீட்டுதல், மூளை மேம்படுத் தும் திறன் போட்டி மற்றும் பேச்சுப்போட்டியில் மூன்றாம் இடமும் பெற்றனர். சிவசக்தி வித்யாலயா, மஹரிஷி வித்யா மந்திர், இசக்கி வித்யாஷ்ரம் உள்ளிட்ட 13 பள்ளிகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். எஸ் ஆர் மிராக்கிள் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த ராஜேந்திரா விஸ்டம் பள்ளி மாணவ மாணவியரை குழல்வாய் மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனர் சிவபபிஸ்ராம் , பள்ளி செயலர் சிவடிப்ஜினிஸ்ராம், முதல்வர் புஷ்பா மற்றும் தலைமை ஆசிரியர் முருகராஜன் ஆகியோர் பாராட்டினர்.

## ஸ்பிரிண்டிங் டு குளோரி

# லிம்கா சாதனை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட இந்தியாவின் விளையாட்டு வெற்றிகளைக் கொண்டாடுகிறது

சென்னை,செப்.06: இந்திய தேசிய விளையாட்டு தினத்தை கொண்டாடும் நிலையில், லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸுடன் இந்தியாவின் விளையாட்டு பாரம்பரியத்தை வரையறுக்கும் அசாதாரண சாதனைகளை நாங்கள் வெளிப்படுத்துகிறோம். ஒவ்வொரு வெற்றியையும் திருவிழாவாகக் கொண்டாடும் ஒரு தேசமாக, வரலாற்றைப் படைக்க வேகப்பந்து வீச்சு, உயரம் தாண்டுதல் மற்றும் கோல் அடித்தல் என நமது விளையாட்டு வீரர்களின் பெருமையை எண்ணி மகிழ்கிறோம்.

புதிய உலக சாதனைகளை அமைப்பதில் இருந்து தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும் வரை, இந்திய விளையாட்டு வீரர்கள், இந்தியாவின் முதல் சாதனை புத்தகத்தில், இப்போது அதன் 33வது பதிப்பில் தங்கள் இடத்தைப் பெற, சிறப்பான சாதனைகளைப் படைத்து தொடர்ந்து முன்னேறி வருகின்றனர். லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் இந்த பிரமிக்க வைக்கும் மைல்கற்களை நினைவுகூருகிறது, நமது நாட்டின் விளையாட்டு ஆர்வத்தின் சாரத்தை படம்பிடித்து, மில்லியன் கணக்கான வாசகர்களின் இதயங்களில் உறுதியின் தீப்பொறியைப் பற்றவைக்கிறது.

சமீபத்திய பதிப்பில் மூழ்கி, இந்தியாவை ஒரு சக்திவாய்ந்த திறமையாளராக மாற்றும் தோற்கடிக்க முடியாத உணர்வை வெளிப்படுத்தும், விளையாட்டுத் திறனைப் பற்றிய பார்வையைப் பெற எங்களுடன் சேருங்கள்.

• ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதல் இந்திய ஃபென்சர் சி.கி. பவானி தேவி 2023 இல் வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம் ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதல் இந்திய ஃபென்சர் ஆனார்.

• ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அதிகப் பதக்கம் வென்ற பெண் வீராங்கனை துப்பாக்கி சுடுதல் தெலுங்கானாவைச் சேர்ந்த துப்பாக்கி சுடும் வீராங்கனையான 18 வயது ஈஷா சிங், 2023 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்ற பதக்கங்களின் அடிப்படையில் மிகவும் வெற்றிகரமான தடகள வீராங்கனையாக உருவெடுத்தார். அவர் மொத்தம் நான்கு பதக்கங்களை வென்றார்: பெண்களுக்கான 25 மீ பிஸ்டல் குழு போட்டியில் ஒரு தங்கம், மற்றும் 25 மீ ஏர் பிஸ்டல் (தனிநபர்), 10 மீ ஏர் பிஸ்டல் (தனிநபர்), மற்றும் 10 மீ ஏர் பிஸ்டல் (அணி) போட்டிகளில் மூன்று வெள்ளிகள். அவரது அபாரமான செயல்திறன் நாட்டின் இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு புதிய அளவுகோலை அமைத்துள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை பொன்ராஜ் நகரை சேர்ந்த பீட்டர் பாண்டியராஜ் வயது 89 இவர் தேசிய அளவில் மூத்தோர் தடகளப் போட்டியில் தங்கப்பதக்கம் வெள்ளி பதக்கம் பெற்று சாதனை பிடித்து வந்தார். இவரை புதுக்கோட்டை மரம் வரம் குழுவினர்கள் அவரது இல்லத்துக்கு சென்று அவரை பாராட்டிகள் பொன்னாடைகள் மூ போர்த்தி அவரை பாராட்டினார்கள். அவரை பாராட்டி

# ஸ்டேட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் அண்ட் பிசிக்கல் ஆக்டிவிட்டி (SAPA) பற்றிய டால்பெர்க் அறிக்கை

சென்னை,செப்.06: இந்த அறிக்கை இந்தியாவில் விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளில் ஈடுபடும் தற்போதைய நிலைகளை கோடிட்டுக் காட்டுகிறது, குறிப்பாக நகர்ப்புற பெண்கள் மற்றும் சிறுமிகளிடையே பரந்த இடைவெளியை சுட்டிக்காட்டுகிறது. இது இந்தியா முழுவதிலும் உள்ள 5,000 பெரியவர்கள் மற்றும் இளம் பருவத்தினரின் கணக்கெடுப்பு மற்றும் குழு விவாதங்கள், நிபுணர்களின் நேர்காணல்கள் மற்றும் ஸ்போர்ட்ஸ் ஃபார் டெவலப்மென்ட் துறையில் செயல்படும் நிறுவனங்களின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. குறைந்தது 155 மில்லியன் இந்திய பெரியவர்களும் 45 மில்லியன் இளம் பருவத்தினரும் உடல் செயல்பாடு குறித்த WHO வழிகாட்டுதல்களைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டனர் என்று டால்பெர்க் ஸ்டேட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் அண்ட் பிசிக்கல் ஆக்டிவிட்டி (SAPA) அறிக்கையை வெளியிட்டது .

Omidyar Network India மற்றும் Ajith Isaac Foundation ஆகியவற்றின் ஆதரவுடன் Sports and Society Accelerator உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை, விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்துதல் மற்றும் பங்கேற்பது, பலன்களை வெளிப்படுத்துதல் மற்றும் சவால்களை சமாளிப்பதற்கான பாதைகளை அடையாளம் காண்பது ஆகியவற்றை அவசர தேவையை சுட்டிக் காட்டுகின்றது .

இந்தியா ஆபத்தான செயலற்ற நிலையில் உள்ளது இந்தியா ஒரு சுறுசுறுப்பான தேசமாக மாறுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்பதை SAPA அறிக்கை நிரூபிக்கிறது, உடல் உழைப்பில் ஈடுபடுபவர்கள் தங்கள் இயக்கங்களில் வேறுபட்டவர்கள் அல்ல , மேலும் வேலை மற்றும் வேலைகளுக்கு வெளியே, பெரும்பாலான பெரியவர்கள் நடை பயிற்சியில் மட்டுமே ஈடுபடுகிறார்கள் இது நன்மை பயக்கும் ஆனால் அவர்களுக்கு போதுமான அளவுக்கு நன்மையை பயக்காது என்று தரவு காட்டுகிறது . நாட்டில் வயது வந்தவர்களில் 10% பேர் மட்டுமே விளையாட்டை விளையாடுகிறார்கள்; தொடர்ந்து விளையாடுபவர்களின் எண்ணிக்கை இன்னும் குறைவாக உள்ளது . அதிகமான இளம் பருவத்தினர் (66%) தொடர்ந்து விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர், அவர்கள் விளையாட்டைத் தேர்ந்தெடுப்பதில் மட்டுப்படுத்தப்பட்ட வேறுபாடு உள்ளது சிறுவர்களில் பாதி பேர் கிரிக்கெட் விளையாடுகிறார்கள், மற்ற விளையாட்டுகளில் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாக உள்ளது.

# பாளை. சவேரியார் பள்ளி ஆசிரியர் தின விழா: நெல்லை சரக டி.ஐ.ஜி., முனைவர் மூர்த்தி பங்கேற்பு!




திருநெல்வேலி மாநகரம் பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளியில் நடந்த ஆசிரியர் தின விழாவில் திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி., முனைவர் பா.மூர்த்தி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் எஸ்.ஆல்பர்ட் ஜோசப், தலைமை ஆசிரியர் எஸ்.ஜோசப் கென்னடி உள்பட பலர் கலந்து கொண்டனர்.




சேலம் கோட்டை மைதானத்தில் தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது. இதில் சரியான எடையில் தரமான பொருட்களை பொட்டலமாக வழங்குதல் ஒரே நேரத்தில் ஒரே காலத்தில் பொருட்கள் வழங்குதல் உட்பட 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இக்கூட்டத்தில் அரசு பணியாளர் சங்க பொதுச் செயலாளர் சுவாமிநாதன் தலைமை தாங்கினார். மேலும் நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர் கணேசன்,மாவட்டத் தலைவர் கார்த்திக்,சுந்தர்ராஜ், சுப்பிரமணி,ஹரிஹரன்,ராஜு, மாரியம்மாள்,சசிகலா, ஜெயலட்சுமி,சிவபாரதி, சதாசிவம்,நாகேந்திரன்,பாரதி, சிலம்பு மற்றும் அரசு பணியாளர்கள் ஏராளமானார் கலந்து கொண்டனர்.

# மேம்படுத்த மேம்பட்ட AI அம்சங்களுடன் அறிமுகப்படுத்துகிறது




கோயம்புத்தூர் ,செப்.06: இந்தியாவின் முன்னணி நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இன்று தனது புதிய பெஸ்போக் AI டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் தொடரை இந்தியாவில் வெளியிட்டது. பெஸ்போக் வடிவமைப்பு மற்றும் ஸ்மார்ட்டிங்ஸ் AI எனர்ஜி மோட், ஸ்மார்ட்டிங்ஸ் ஹோம் கேர், ஸ்மார்ட் ஃபார்வர்டு போன்ற மேம்பட்ட AI அம்சங்களுடன், கன்வெர்டிபிள் 5இன்1, ட்வின் கூலிங் பிளஸ்ல் மற்றும் ஆக்டிவ் ஃப்ரெஷ் ஃபில்டர்+ ஆகியவை இந்தியர்களின் வளர்ந்து வரும் நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது. சாம்சங் பெஸ்போக் கிமி டபுள் டோர் ரெஃப்ரிஜி ரேட்டர் சீரிஸ் கண்ணாடி மற்றும் ஸ்டீல் ஃபினிஷில் கிடைக்கும், பிளாக் கிளாஸ், பிளாக் மேட், லக்ஸ் பிளாக், எலிகண்ட் ஐநாக்ஸ் மற்றும் ரீஃபைன்ட் ஐநாக்ஸ் போன்ற பல விருப்பங்களைத் தேர்வுசெய்யலாம். சாம்சங்கின் புதிய பெஸ்போக் கிமி டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் சீரிஸ் மூன்று திறன்களில் கிடைக்கும் 396லி, 419லி மற்றும் 465லி மற்றும் பெரிய சேமிப்பு திறன், வசதி மற்றும் நெகிழ்வுத் தன்மையை வழங்கும் ஆரம்ப விலை ரூபாய் 64990 இல் கிடைக்கும். “குளிர்சாதனப் பெட்டி வகையின் தலைவர்களாக, எங்கள் கவனம் குளிரூட்டலுக்கு அப்பாற்பட்டது அணுகல், தகவமைப்பு மற்றும் அழகியல் வடிவமைப்பு அனைத்தையும் ஒரே நேரத்தில் வழங்குவதன் மூலம் எங்கள் சாதனங்கள் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துகின்றன. பெஸ்போக் AI இரட்டை கதவு குளிர்சாதன பெட்டிகள் உங்கள் உட்புறத்துடன் தடையின்றி பொருந்துகின்றன. அவை மேம்பட்ட AIஅம்சங்கள், பெஸ்போக் வடிவமைப்பு மற்றும் பெரிய சேமிப்பக திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

# தொழிற்சாலை உபகரணங்கள் குறித்த கண்காட்சி




கோவை,செப்.06: கோவை மாவட்டம் கொடிசியாவில் தொழிற்சாலை உபகரணங்கள் குறித்த கண்காட்சி வருகிற 10–ந் தேதி தொடங்குகிறது. இது குறித்து கோவை கொடிசியா தலைவர் எம்.கார்த்திகேயன், செயலாளர் எம்.யுவராஜ், கண்காட்சி தலைவர்கள் வி.சரவணகுமார்,என்.ஜெகதீஷ் ஆகியோர் நிருபர்களிடம் கூறுகையில் தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்கள், மெட்டீரியல், ஹேண்ட்லிங் உபகரணங்கள், தளவாடங்கள் தொடர்பான ராமேட் இந்தியா 2024 என்ற கண்காட்சியும், 3 பி எக்ஸ்போ 2024 என்ற பேப்பர், பிரிண்ட் மற்றும் பேக்கேஜிங் குறித்த கண்காட்சியும் கோவை கொடிசியா வளாகத்தில் 3 நாட்கள் நடக்கிறது. இந்த கண்காட்சியில் ஆட்டோமொபைல்ஸ்,டெக்ஸ் டைல்ஸ், என்ஜினீயரிங்,பவுண்டரி ,எலக்ட்ரிக் மற்றும் எலக்ட்ரானிக்ஸ்,அடிப்படை கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், விவசாயம், ரெயில்வே, வான் சார்ந்தவை, பாதுகாப்பு, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு மற்றும் மேம்பாடு என்று பல துறை சார்ந்த தொழிற்சாலைகள் உள்ளன. தொழிற்சாலைகள் பயன் பெறும் வகையில் நடத்தப் படும் இந்த கண்காட்சி மூலப் பொருட்கள் மற்றும் ஆதார வளங்களுக்கான ஒரு கண்காட்சியாக திகழும். தமிழ் நாடு, ஆந்திரா, கோவா, கர்நாடகா, மராட்டியம், மேற்கு வங்காளம் உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து வருபவர்கள் கண்காட்சியில் பல பொருட்களை காட்சிப்படுத்த உள்ளனர்.இந்த கண்காட்சியில் ரூ.150 கோடிக்கும் மேல் வர்த்தகம் நடைபெறும் என்று எதிர் பார்க்கிறோம். என்று கூறினர்.உடன் கண்காட்சி துணைத் தலைவர்கள் ஸ்ரீதர், சுரேஷ்குமார் மற்றும் பலர் உடன் இருந்தது குறிப்பிட தக்கது

# விளையாட்டு செய்திகள்

# ராஜஸ்தான் ராயல்ஸ் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்புக்குத் திரும்பும் ராகுல் திராவிட்



2025 ஐபிஎல் சீசனுக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்புக்கு ராகுல் திராவிட் மீண்டும் திரும்புகிறார். டி20 உலகக்கோப்பையில் இந்திய அணி உலக சாம்பியன் ஆனதோடு திராவிடின் இந்திய அணித் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது. ஐபிஎல் 2025க்கான மெகா ஏலம் தொடர்பாக ராகுல் திராவிடிடம் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி நிர்வாகம் வீரர்கள் தக்கவைப்பு தொடர்பாக விவாதித்ததாக ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் ராயல்ஸ் கேப்டன் சஞ்சு சாம்சனுடன் ராகுல் திராவிட்டிற்கு நீண்ட கால பழக்கம் உள்ளது. திராவிடின் மேற்பார்வையில் தான் யு19 அணியில் சஞ்சு விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியுடன் ராகுல் திராவிடின் பிணைப்பு என்பது நீள்நெடும் பின்னணி கொண்டது. 2012, 2013 ஐபிஎல் தொடர்களில் ராஜஸ்தான் கேப்டனாக இருந்தார் ராகுல் திராவிட். பிறகு 2024, 2015 ஐபிஎல் தொடர்களில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் இயக்குநராகவும் ஆலோசகராகவும் இருந்தார். 2016ல் திராவிட் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்குப் பயிற்சியாளராகச் சென்றார். 2019ல் பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் தலைமைப்பொறுப்பு வகித்தார். பிறகு அங்கிருந்து 2021ல் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

ராகுல் திராவிட் மட்டுமல்லாமல் இந்திய அணியின் பேட்டிங் ஆலோசகராக திராவிட்டுடன் இருந்த விக்ரம் ராத்தோரையும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி திராவிட்டின் உதவிப்பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப் போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போது ராஜஸ்தான் ராயல்ஸ் இயக்குநராக இருக்கும் குமார் சங்கக்காரா ராஜஸ்தான் ராயல்ஸ் குழுமத்தின் பிற அணிகளான தென் ஆப்பிரிக்க டி20 லீகின் பார்ல் ராயல்ஸ் அணி மற்றும் கரீபியன் பிரீமியர் லீகின் பார்பேடோஸ் ராயல்ஸ் அணி ஆகியவற்றின் தலைமைப்பொறுப்பை ஏற்கவிருக்கிறார்.

2008ல் ஐபிஎல் தொடக்க சீசனில் மறைந்த ஸ்பின் லெஜண்ட் ஷேன் வார்ன் தலைமையில் ராஜஸ்தான் ராயல்ஸ் முதல் தொடரில் கோப்பையை வென்றதோடு சரி. அதன் பிறகு இன்னும் சாம்பியனாகவில்லை. அடுத்து 2022ல் குஜராத் டைட்டன்ஸ் சாம்பியனாக ராஜஸ்தான் ராயல்ஸ் ரன்னர்களாக முடிந்தனர். 2023 சீசனில் பிளே ஆப் சுற்றுக்கு வர முடியவில்லை. 2024ல் குவாலிஃபையர் 2 ல் தோற்கடிக்கப்பட்டனர். 2025 தொடரில் எப்படியாவது கோப்பையை வெல்ல வேண்டும் என்ற தீவிர நோக்கத்துடன் இப்போது ராகுல் திராவிட்டை மீண்டும் தலைமைப் பொறுப்புக்கு ஒப்பந்தம் செய்யவிருக்கின்றனர்.

# அரியலூரில் எல்.ஐ.சி காப்பீடு வார விழா பேரணி




அரியலூர்,செப்.06: எல்.ஐ.சி காப்பீடு வார விழாவையொட்டி, அரியலூர் கிளை அலுவலகம் சார்பில் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது. கடந்த 1 ஆம் தேதியிலிருந்து 7 ஆம் தேதி வரை எல்ஐசி காப்பீடு வாரவிழா கடைப்பிடிக்கப்பட்டு, அரியலூரில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி வியாழக்கிழமை முகவர்கள் சார்பில் பேரணி நடைபெற்றது.

அண்ணா சிலையிலிருந்து எல்ஐசி அலுவலகம் வரை பேரணியை கிளை முதுநிலை மேலாளர் பி.ஜெயபாலன் தொடக்கி வைத்தார். பேரணியில் எல்.ஐ.சி}யின் செயல்பாடுகள், தற்போது காப்பீடு நிலவரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி கிளை மேலாளர் சக்திவேல், முகவர்கள் பாலசுப்பிரமணியன், முருகானந்தம், கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து, கிளை அலுவலகத்தில் வாடிக்கையாளர்கள், பணியாளர்களுக்கு இலவச கண் மருத்துவ முகாம் நடைபெற்றது.

ஜெயங் கொண்டத்தில் எல்ஐசி காப்பீடு வாரவிழாவையொட்டி நடைபெற்ற இருசக்கர வாகன பேரணியை கிளை மேலாளர் பிரபாகரன் கொடிய சைத்து தொடக்கி வைத்தார். பேரணியில் அலுவலர்கள், முகவர்கள் திரளானோர் பங்கேற்றனர்.

படவிளக்கம்: எல்ஐசி காப்பீடு வாரவிழாவையொட்டி அரியலூரில் வியாழக்கிழமை பேரணியில் ஈடுபட்ட எல்ஐசி அலுவலர்கள், முகவர்கள்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், கோவிந்தாபுரம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

### திருவள்ளூர் மாவட்டம்,பழவேற்காடு அருகே மின்சாரம் தாக்கி

# 4 எருமை மாடுகள்,ஒரு காட்டுப்பன்றி,காகம் பலி



பொன்னேரி,செப்.06: திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு அடுத்த ஜமீலாபாத் கிராமத்தில் வசிப்பவர் யூனிஸ்.இவர் எருமை மாடுகள் வளர்த்து அதன் மூலம் பால் வியாபாரம் செய்து வாழ்வாதாரம் தேடி வாழ்க்கை நடத்தி வருகிறார். இந்நிலையில் பழவேற்காடு காட்டு பகுதியில் மாடுகள் மேய்வதை வழக்கமாக கொண்டிருந்த நிலையில் கடப்பாக்கம் அருகே உள்ள அபிராமபுரம் பகுதியில் மாடுகள் மேய்ச்சலில் இருந்த போது நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக அபிராமபுரம் பகுதியில் இருந்து பழவேற்காடு பக்கிங்காம் கால்வாய் பகுதியில் உள்ள இறால் பண்ணைகளுக்கு செல்லக்கூடிய மின்சாரம் கம்பிகள் அறுந்து விழுந்து கிடந்துள்ளது. இதனை அறியாத எருமை மாடுகள் மற்றும் பறவைகள் காட்டு விலங்குகள் அதனை மிதித்து மின்சாரம் தாக்கி சிதறி ஓடி உள்ளன. இதில் யூனுசுக்கு சொந்தமான நான்கு எருமை மாடுகளும் ஒரு காட்டுப் பன்றியும் காகங்களும் மின்சாரம் தாக்கி இறந்துள்ளன. இது குறித்து காட்டூர் வருவாய் துறை அலுவலர்களுக்கும் கால்நடை மருத்துவர்களுக்கும் அளித்த தகவலின் பேரில் அங்கு சென்ற அதிகாரிகள் மாடுகளின் பிரேதத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனை செய்தனர். பின்பு இதுகுறித்து மின்சார துறைக்கு தகவல் தெரிவித்து மின் ஒயர்களை உடனடியாக சரி செய்யவும் அறிவுறுத்தினர். பழவேற்காடு சுற்றுவட்டார பகுதியில் பல்வேறு இடங்களில் பழைய மின்கம்பங்கள் பழைய மின் கம்பிகள் அவ்வப்போது அறுந்து விழுந்து இது போன்ற விபத்துக்கள் ஏற்படும் சூழலில் மாடுகளை கொண்டு வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்

### நிதிபற்றாக்குறையை சரிசெய்து இளைஞர்களுக்கு

# திமுக வேலைவாய்ப்பை அளிக்கிறது

**ரெட்டியார்சத்திரத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் செந்தில்குமார் எம்.எல்.ஏ பேச்சு**



திண்டுக்கல்,செப்.06: திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் ரெட்டியார் சத்திரம் தெற்கு வடக்கு ஒன்றியங்கள் மற்றும் ஸ்ரீராமபுரம் கன்னிவாடி பேரூர் திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் ரெட்டியார்சத்திரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான

இபெ.செந்தில்குமார் தலைமை வகித்து கூறியதாவது ரெட்டியார் சத்திரத்தில் அடுத்த ஆண்டு அரசின் சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வரவுள்ளது அமைச்சர் ஐ. பெரியசாமி கடந்த ஆண்டு உயர்கல்வித் துறை சார்பில் ஒரே வருடத்தில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு 7 கல்லூரிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் அறிவிக்க செய்தார்.

அதிமுக ஆட்சி காலத்தில் கிராம சாலைகள் அனைத்தும் குண்டும் குழியுமாக இருந்தது. ஆனால் திமுக அரசு பொறுப்பேற்றவுடன் அனைத்து கிராம சாலைகளும் தரமாக அமைக்கப்பட்டுள்ளது திமுக ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்களில் பல நெருக்கடிகளை கண்டு அஞ்சாமல் தமிழகத்திற்காக முதலமைச்சர் முகஸ்டாலின் அவர்கள் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி சிறப்பாக ஆட்சி செய்து வருகிறார்.

மேலும் நிதி பற்றாக்குறையை சரி செய்து தகுதியுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவோம் என்றும் மேலும் திமுக ஆட்சியில் செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துக் கூறி எதிர் வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் மு.க. ஸ்டாலினை மீண்டும் முதலமைச்சராக்க பாடுபடுவோம் என்றார்.

இக்கூட்டத்தில் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ப.க.சிவகுருசாமி வடக்கு ஒன்றிய செயலாளர் மணி மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி பேரூர் செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா. கன்னிவாடி இளங்கோவன் மாவட்ட கவுன்சிலர்கள் சுப்புலெட்சுமி சண்முகவேல் ஆரோக்கிய சுதா ராஜா. ஒன்றியக்குழு துணைத் தலைவர் ராஜேஸ்வரி தமிழ் செல்வன் பேரூராட்சி தலைவர்கள் ஸ்ரீராமபுரம் சகிலா ராஜா கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம் ஒன்றிய கவுன்சிலர்கள் நாகலெட்சுமி ரமேஷ் மலைச்சாமி உட்பட திமுக ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் மற்றும் ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் கட்சி தொண்டர்கள் பெரும் திரளானோர்கள் கலந்து கொண்டனர்

# ஸ்ரீவைகுண்டம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா

**அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு பரிசளிப்பு**



ஸ்ரீவைகுண்டம்,செப்.06: ஸ்ரீவைகுண்டம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு பரிசளித்தனர்.

ஸ்ரீவைகுண்டம் ஆதி குமரகுருபர சுவாமிகள் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி நந்தினி கடந்த பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 500க்கு 496 மதிப்பெண்கள் பெற்று அரசு பள்ளிகள் அளவில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று தேர்ச்சி பெற்றார். மேலும் பல மாணவிகள் சிறந்த மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற நிலையில் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆசிரியர்கள் தினத்தில் பாராட்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தாசில்தார் சிவக்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் பேரூராட்சி தலைவர் கந்த சிவசுப்பு, யோகா மாஸ்டர் இசக்கிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஓய்வு பெற்ற காவல்துறை தலைவர் மாசானமுத்து, பேரா சிரியர்கள் சேதுராமன், நிசார், போஸ், அரசு வழக்கறிஞர் ஷாஜகான் உள்ளிட்ட பலர் வாழ்த்தி பேசினர். தொழில் அதிபர் சினேகா முருகன் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

ஆசிரியை பூர்ணகலா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்கள் அனைவரையும் விழாவில் பாராட்டப்பட்டனர். பின்னர் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது, விழாவில், சமூக ஆர்வலர்கள் சித்திரை, ரவி, பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில் தமிழ்நாடு வணிகர்களின் சங்கமம் சார்பில்

# சட்ட விதிகள் நூல் வெளியீட்டு விழா




தி.மலை,செப்.06 திருவண்ணாமலை திருவண்ணாமலையில் தமிழ்நாடு வணிகர்களின் சங்கமம் சார்பில் சட்ட விதிகள் நூல் வெளியிட்டு விழா நடைபெற்றது இந்த விழாவில் மாநில தலைவர் செந்தில்குமார் கலந்து கொண்டு பேசியதாவது. சட்ட விதிகள் மாற்றங்களை கொண்டு வந்து தமிழகத்தில் உள்ள வணிகர்கள் சங்கமம் 40 மாவட்டங் களில் உள்ளடக்கி 12 மண்டலமாக பிரித்து நிர்வாகிகளை தேர்ந்தெடுத்து 35 தொழில் முனை வோர்கள் பிரிவுகளாக வணிகர்கள் ஒருங் கிணைந்து செயல்பட வேண்டும் வணிகர்கள் தங்களது வியாபாரங் களை பெருக்கும் வகை யில் மகளிர் திட்டம், மருத்துவம், உணவகம். தங்கும் விடுதி, என்பன 35 தொழில் முனைவோர் திட்டங்களை பயன்படுத்தி தமிழ்நாடு வணிகர் சங்கமம் சட்ட விதிகள் நூல் வெளியீட்டு விழா நடைபெறுகிறது இந்த சட்ட விதிகளை பயன்படுத்தி நல்ல முறையில் வணிகர்கள் தொழில் செய்ய வேண்டும் என இந்த தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன் என இவ்வாறு பேசினார்.விழாவில் மாநில துணைத்தலைவர் பாலாஜி, மாநில பொருளாளர் கணேசன், மண்டல தலைவர் ஜோசப்ராம்கி, மாவட்ட தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பன்னீர், மற்றும் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய பேரூராட்சி நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வ உ சிதம்பரம் பிள்ளை அவர்களின் 153 வது பிறந்த தின விழா அனைத்து வெள்ளாளர் மகாசபையின் சார்பாக கொண்டாடப்பட்டது இதில் வ உ சி யின் முழு உருவ வெங்கல சிலைக்கு சபையின் சார்பாக மரியாதை செய்யப்பட்டது விழாவிற்கு சபையினுடைய தலைவர் குரு சுப்ரமணியன் மற்றும் இருளப்பன் சவரிமுத்து பிள்ளை வின்செண்ட் ஜெயக்குமார் ராதாகிருஷ்ணன் ராமலிங்கம் கனகராஜ் மகேஸ்வரன் கோவிந்தன் லோகநாத முருகன் அரசு ஊழியர் குழு சார்பாக ரமேஷ்பாபு ரமேஷ் குமரேசன் நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது வர்த்தக சங்கத்தின் சார்பாக வர்த்தக சங்கத்தின் உடைய செயலாளர் ராமகிருஷ்ணன் பன்னீர்செல்வம் முத்துக்குமார் கணேசன் போன்ற ஏராளமானவர் கலந்து கொண்டு அய்யாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர் அதனைத் தொடர்ந்து வ உ சி பள்ளியில் நடைபெற்ற வ.உ.சி என்னுடைய பிறந்த தின விழா மற்றும் ஆசிரியர் தின விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களை பள்ளியின் முதல்வர் ராணி அவர்கள் வரவேற்றுப் பேசினார் இதன் தொடர்ச்சியாக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது விழாவை அனைத்து வெள்ளாளர் மகா சபை ஏற்பாடு செய்தது இறுதியில் கோவிந்தராஜ் நன்றி கூறினார்கள்

# சிங்கப்பூரில் முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையம்

சிங்கப்பூர்,செப்.06 முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையம் சிங்கப்பூரில் அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார். திருக்குறளின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பும் வகையில், திருவள்ளுவர் கலாச்சார மையங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி, தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார். அதன்படி தற்போது அரசு முறை பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ் வோங்கிடம், முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையத்தை சிங்கப்பூரில் அமைப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த மையம் மூலம், திருக்குறள் சிறப்பு, தமிழ் மொழியின் இலக்கிய வளம், கலாச்சார சிறப்புகள் குறித்து வெளிப்படுத்தும் வகையில் நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன. நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'சிங்கப்பூரில் தமிழ் மொழி, நாகரிகம், பண்பாடு, இவற்றை வளர்க்கவும், பேணி காக்கவும், திருவள்ளுவர் கலாச்சார மையம் ஒன்றை நிறுவ உள்ளதாக அறிவித்தமைக்கு பிரதமர் மோடிக்கு நன்றி' என குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் கலாச்சார மையம் அமைப்பதற்கு சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். தமிழகத்திலும் பல்வேறு தரப்பினர் மத்தியில் இருந்தும் வரவேற்பும், பாராட்டும் குவிந்து வருகிறது.



கரூர் தாந்தோன்றிமலை அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் கலெக்டர் தங்கவேல் தேசிய ஊட்டச்சத்து வார விழாவை முன்னிட்டு ஊட்டச்சத்து கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.



வேலூர் மாவட்டம்,வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் சாய் சுப்ரபாதம் கேப் ஹங்கிரி கார்னர் கடை திறப்பு விழா நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்கள் வேலூர் விஐடி பல்கலைக்கழகம் வேந்தர் டாக்டர் ஜி.விஸ்வநாதன்,இணை இயக்குனர் சிஎம்சி வேலூர் ராணிப்பேட்டை வளாகம் தீபக் செல்வராஜ் ,விஐடி பல்கலைக்கழகம் துணைத் தலைவர் சங்கர் விஸ்வநாதன் மற்றும் சாய் சுப்ரபாதம் குழுமம் நிறுவனர் பி.மேத்தாகிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதுகுளத்தூரில் நகர் பிள்ளைமார் சங்க சார்பில் கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரனாரின் 153 வது பிறந்தநாள் விழா தலைவர் சரவணன் தலைமையிலம் , செயலாளர் முத்துமாடசாமி முன்னிலையில் நடைபெற்றன. பொருளாளர் பாண்டிமுருகன் அனைவரையும் வரவேற்றர் நிகழ்ச்சியில் கௌரவத் தலைவர் சந்திரபோஸ் ராஜன் துணைச் செயலாளர் நடராஜன் மற்றும் ஒருங்கிணைப்பாளர் நாககுமார் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன.




கன்னியாகுமரி கடற்கரையில், சென்னை மெரினா கடற்கரையில் இருப்பது போன்று மாற்றுத்திறனாளிகள் கடலில் நீராட தடம் அமைத்து தர வேண்டும், அரசு அலுவலகங்கள் மற்றும் ஏடிஎம் மையங்களில் 3 சக்கர வாகனம் செல்ல சாய்வு தளம் அமைத்து தர வேண்டும் என முதுகு தண்டுவட பாதிப்பு தினமான செப்டம்பர் 5 ம் தேதியன்று தண்டுவடம் காயமடைந்தோர் அமைப்பு கன்னியாகுமரி மாவட்டம் சார்பில் முதுகுத்தண்டு காயம் அடைந்தோர் அமைப்பின் மாவட்ட பொறுப்பாளர் முருகன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். மேலும் வாகனங்களில் செல்லும்போது ஹெல்மெட், சீட் பெல்ட் கட்டாயம் அணிய வேண்டும் என்ற பாதுகாப்பையும் வலியுறுத்தி பேரணி நடைப்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.



சேலம் மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் சேலம் வருவாய் மாவட்ட அளவிலான கேரம் போர்டு போட்டிகள் 2024 25 குகை மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் செயலாளர் நிர்வாக குழு மற்றும் சிறப்பு விருந்தினராக வெங்கடேஸ்வரன் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து தலைமை உரை ஆற்றி போட்டியை துவக்கி வைத்தார். குகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மோகனசுந்தரம் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். சேலம் மாவட்ட கேரம் கழக செயலாளர் அன்பன் டேனியல் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு கேரம்போர்டு கழகத் தலைவர் மற்றும் சேலம் மாவட்ட கேரம் போர்டு கழகத் தலைவர் அமான் என்கிற நாசர் கான் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். சேலம் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் லாரன்ஸ் வாழ்த்துரை வழங்கினார். இப் போட்டியின் இறுதியில் உடற்கல்வி ஆசிரியர் செந்தில்குமார் அனைவருக்கும் நன்றி கூறினார்




கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் 153 வது பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி மாவட்டம் தென்காசி நகராட்சி 6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் சுமதி இசக்கிரவி ஏற்பாட்டில் அன்னாரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு இனிப்பு வழங்கப்பட்டது, இந்நிகழ்ச்சியில் வார்டு கழக செயலாளர் சண்முகநாதன்,16 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஜெயலெட்சுமி, அறங்காவலர் குழு தலைவர்கள் இசக்கி ரவி, பால்ராஜ், திமுக நகர துணை செயலாளர் ராம் துரை, நகர விவசாய அணி சோமு, பிள்ளைமார் சமுதாய நாட்டாண்மை பரமசிவ பிள்ளை, பிச்சையா பிள்ளை, பெட்டிக்கடை அய்யப்பன், நகர திமுக இளைஞரணி சுடலை, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# உதகை குட் ஷெப்பர்ட் பள்ளி நிறுவனத் தலைவர் பி.சி.தாமஸ் அறக்கட்டளை அபாரம்

## சமூகப் பணிகளில் முழுமையான ஈடுபாடு

**உதகை,செப்.06:** உதகையில் புகழ் பெற்ற சர்வதேச பள்ளி ஆன குட் ஷெப் பர்ட் பள்ளி நிறுவனத் தலைவரான பி சி தாமஸ் அறக்கட்டளை செய்து வரும் நற்பணிகள் குறித்து செயலாக்கம் காண்பிக்கப்பட்டது. மாவட்டத்திலுள்ள ஆதரவற்றோர் இல்லங்கள். அரசு மேல்நிலைப் பள்ளிகள் அரசு உதவி பெறும் பள்ளிகள் நலிவ டைந்த மக்களுக்கான வாழ்வாதார மேம்பாடுகள். மேலும் அரசு உதவி பெறும் பள்ளிகளில்



உள்ள மிகுந்த ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களுக்கு கல்வி கட்டணம் உள்ளிட்ட பல்வேறு நற்பணிகளும் வயதான வர்களுக்கு இலவச மருத்துவ உதவிகளும் இந்த அறக்கட்டளை பல்வேறு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு ஏற்பாடு செய்துள்ளது. நிறுவனத் தலைவர் பி சி தாமஸ் மறைவிற்குப் பிறகு அவரது துணைவியார் எல்சம்மா தாமஸ் வழிகாட்டுதலின் பெயரில் தற்போது பள்ளியின் தாளாளராக உள்ள ஜேக்கப் தாமஸ் சீரிய தலைமையின் கீழ் சிறப்பாக பணியாற்றி வரும் இந்த அறக்கட்டளையானது இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் மாணவியர் முழு ஈடுபட்டுடன் சமூகப் பணிகளில் ஈடுபடவும் அறக்கட்டளையின் உடைய முக்கிய நோக்கங்களை நிறைவேற்றி. மக்கள் வாழ்வில் சிறப்பான இடம் பிடித்துள்ளது. இதற்காக இந்த அறக்கட்டளையின் பணிகள் மேலும் மேலும் உயர வேண்டும் என்று மாவட்ட மக்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

டாடா மோட்டார்ஸ் அதன் Mid-SUV Curvv ஐ

# 9.99 லட்சம் முதல் தொடங்கும் ஆரம்ப விலையில் அறிமுகம்




**சென்னை,செப்.06:** இந்தியாவின் முன் னணி வாகன உற்பத்தி யாளரான டாடா மோட்டார்ஸ், Tata Curvv - SUV Coupe, வாகனத்தை 9.99 லட்சம் ஆரம்ப விலையில் அறிமுகம் செய்வதை பெருமையுடன் அறிவித்துள்ளது. நிறுவனத்திற்கு ஒரு பெரிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், புத்தாக்கமான

மற்றும் அற்புதமான பாடி ஸ்டைல்களில் மிசிணிவிருப்பங்களுடன் வேகமாக வளர்ந்து வரும் mid-SUV பிரிவில் நுழைந்துள்ள டாடா மோட்டார்ஸ் Curvv ஐ மூன்று என்ஜின் விருப்பங்களில் அறிமுகப் படுத்தி யுள்ளது, இவை அனைத்தும் மேம்பட்ட டூயல் கிளட்ச் தானியங்கி டிரான்ஸ்மிஷனுடன் வழங்கப்பட்டுள்ளன. சக்திவாய்ந்த புதிய ஹைபரியன் பெட்ரோல் இன்ஜெக்ஷன் இன்ஜின், 1.2லி ரெவோட்ரான் பெட்ரோல் எஞ்சின் மற்றும் புதிய 1.5லி க்ரையோஜெட் டீசல் எஞ்சின் மற்றும் டீசலில் பிரிவின் முதல் டூயல் கிளட்ச் டிரான்ஸ் மிஷனுடன், நிறுவனம் நுகர்வோருக்கு அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான ஒவ்வொன்றிலிருந்தும் தேர்வு செய்ய ஒரு நல்ல கலவையை வழங்குகிறது.

பாக்R-SUV பாடி ஸ்டைல்கள் கொண்ட உயர் வளர்ச்சிப் பிரிவில், டாடா மோட்டார்ஸ், அதன் DNA க்கு உண்மையாக, பிரிமியம் SUV Coupe வடிவமைப்பை ஜனநாயகப் படுத்து வதன் மூலம் அந்த வகையை மேம்படுத்தியுள்ளது – இது, உலகளவில் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட பாடி ஸ்டைல் ஆகும். Curvv என்பது பெஸ்ட் இன் கிளாஸ் பாதுகாப்பு, செக்மென்ட் முதல் அம்சங்கள், பல மற்றும் தனித்துவமான பவர் டிரெய்ன் விருப்பங்களைக் கொண்ட பிரிவில் உள்ள ஒன்றாகும் கோல்ட் எசென்ஸ், டேடோனா கிரே, ப்ரிஸ்டைன் ஒயிட், ஃபிளேம் ரெட், ப்யூர் கிரே மற்றும் ஓபரா ப்ளூ ஆகிய ஆறு வித்தியாசமான வண்ணங்களில் கிடைக்கும், Tata Curvv அக்கம்பிளிஷ்டு, கிரியேட்டிவ், பியூர் மற்றும் ஸ்மார்ட் பர்ஸனாக்களில் கிடைக்கும்.

# நீரிழிவு நோய் ஆரம்ப நிலையில் அதை கட்டுக்குள் வைத்திருக்கும் ஊட்டச்சத்து உணவுகள்

## டாக்டர் ரோஹினி பாட்டீல், ஊட்டச்சத்து நிபுணர் ஆலோசனைகள்

**கோவை,செப்.06:** இந்தியாவில் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலை என்பது அதிகரித்து வருவதால், உங்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் செலுத்துவது என்பது முக்கியம். நாம் சாப்பிடும் ஒவ்வொரு உணவும் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைப் பராமரிப்பதற்கு முக்கியமாகும், மேலும் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையைக் கூட மாற்றலாம் என்று ஊட்டச்சத்து நிபுணர் டாக்டர் ரோஹினி பாட்டீல் தெரிவிக்கிறார்.

நீரிழிவு நோயாக மாறுவதற்கு முன்பு ரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த குறிப்பிட்ட உணவுகளை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து அவர் பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார்.



உணவு மாற்றங்களுடன், சுறுசுறுப்பான வாழ்க்கை முறை, பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பது மற்றும் ரத்த சர்க்கரையின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த உணவுக்குப் பிந்தைய நடைப்பயிற்சி போன்ற வழக்கமான உடற் பயிற்சிகளை மேற்கொள்ளவும் அவர் அறிவுறுத்துகிறார்.

நீரிழிவு ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள் :பாதாமில் உள்ள புரதம் அடர்த்தியானது, ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் நார்ச்சத்து நிறைந்தது, இவை அனைத்தும் ரத்த சர்க்கரையை சீராக்க உதவுகின்றன.டாக்டர் அனூப் மிஸ்ரா மற்றும் டாக்டர் சீமா குலாட்டி ஆகியோரால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட இரண்டு புதிய ஆராய்ச்சி ஆய்வுகள், உணவில் பாதாமை சேர்ப்பது நீரிழிவு நோயின் சுமையைக் குறைக்க உதவும் என்பதைக் காட்டுகிறது.

இன்னும் குறிப்பாக, காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவிற்கு 30 நிமிடங்களுக்கு முன் ஒரு சில பாதாம் பருப்புகளை மூன்று மாதங்களுக்கு சாப்பிட்டவர்களிடம் செய்யப்பட்ட ஆய்வில், சுமார் கால் பகுதியினருக்கு நீரிழிவின் முந்தைய நிலையில் நல்ல முன்னேற்றம் இருப்பது தெரிய வந்தது. நீரிழிவு ஆய்வாளர்கள், நீரிழிவு நோய்க்கு முந்தைய நீரிழிவு நோயிலிருந்து சாதாரண ரத்த குளுக்கோஸ் ஒழுங்கு முறைக்கு திரும்புவதை "மருத்துவத்தின் புனித கிரெயில்" என்று விவரித்தனர்.

சென்னையில் ஒலி மாசு ஏற்படுவதை தடுக்க

# புதிய போக்குவரத்து நடைமுறை

**சென்னை,செப்.06:** ஒலி மாசு ஏற்படு வதை தடுக்க, சென்னை யில் புதிய போக்குவரத்து நடைமுறை கொண்டு வரப்படுகிறது. நாட்டின் பிற மெட்ரோ நகரங்களில் பின்பற்றப்படும் நடைமுறையை சென்னை போக்குவரத்து காவல்துறையும் பின்பற்ற உள்ளது. அதன்படி, ஒலியை அளவிடும் டெசிமல் மீட்டர்களை போக்குவரத்து சிக்னல்களுடன் பொருத்த திட்டமிடப் பட்டுள்ளது. சிக்னல்களில் நிற்கும் வாகன ஓட்டிகள் தொடர்ந்து ஹாரன் அடித்து கொண்டே இருக்கும் பட்சத்தில், ஒலி மாசு அனுமதிக்கப்பட்ட அளவை தாண்டினால், சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்து கொண்டே இருக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக சென்னையில் இதனை



நடைமுறைப்படுத்த தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் பரிந்துரையின் பேரில் ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நடைமுறை படிப்படியாக மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வாகனங்களில் ஒலி அளவு அதிகமாக இருப்பதை கண்டு பிடிப்பதற்கு போக்குவரத்து காவலர்களுக்கு இயர் பிளக் வழங்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளன.



நீலகிரி மாவட்டம், உலிக்கல் பேரூராட்சி சேலாஸ் பகுதியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டி ருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு, அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தெரிந்துக் கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள ஏமப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு மாதிரி மேல்நிலை பள்ளியில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு ஆலோசகர் முருகன் கலந்து கொண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு பாலியல் ரீதியாக துன்புறுத்தல் குழந்தை திருமணம் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு பள்ளி செல்ல குழந்தைகளை கண்டறிந்து பள்ளியில் சேர்த்தல், போதை பொருள் ஒழிப்பு, குறித்து விளக்க உரை ஆற்றினார் இதில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# சேலத்தில் முதல்முறையாக விண்வெளி அறிவியல் சார்ந்து விழிப்புணர்வு!



சேலம், செப்.06

சேலம் மாவட்டத்தில் முதல் முறையாக பள்ளி. மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்களுக்கு விண்வெளி அறிவியல் சார்ந்து விழிப்புணர்வு வழங்கிட பெங்களூர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம், சேலம் டார்வின் அறிவியல் மன்றம் மற்றும் R P சாரதி தொழில் நுட்ப கல்லூரி இணைந்து சேலம் புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள திடலில் கண்காட்சி அமைக்கப்பட்டன. சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி நிகழ்ச்சி தொடங்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் ரிப்பன் வெட்டி நிகழ்வில் கலந்து கொண்டார்.

நிதிஷ் தலைவர் R P Sarathy Institute Of Technology வரவேற்புரை ஆற்றினார். பால கிருஷ்ணன் தலைவர் Darwin Science Club முன்னிலை வகித்தார்.சிறப்பு விருந்தினர்: ISRO விஞ்ஞானி மூர்த்தி, ISRO விஞ்ஞானி சீனிவாசா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் மாணவ, மாணவியர்கள் ISRO விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் நிகழ்வு, ISRO செயல்பாடுகள் குறித்த மாதிரிகள் (ROCKETS & SATELLITES MODELS) பல்வகைதொலைநோக்கி அரங்கு,வியப்பான அறிவியல் பரிசோதனைகள் (Funny Science Experiments), வான் அறிவியல் மற்றும் ISRO செயல்பாடுகள் குறித்த வினாடி வினா போட்டி நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன

## நீதி மன்ற உத்திரவை அமுல்படுத்தாத, மதிக்காத ஒட்டன்சத்திரம் வருவாய்துறை மீது நடவடிக்கை எடுக்ககோரி

# இருளக்குடும்பன்பட்டி சமூக ஆர்வலர் பி.முத்துஈஸ்வரன் மாவட்ட ஆட்சியரிடம் அதிரடி புகார்

ஒட்டன்சத்திரம் செப்.6

ஒட்டன்சத்திரம் இருளக்குடும்பன்பட்டி கிராமத்திற்கு செல்லும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் கோவில் மற்றும் மயானப் பாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருக்கு ஊர் பொது மக்கள் சார்பாக சமூக ஆர்வலர் பி.முத்துஈஸ்வரன் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அம்மனுவில் அவர் மேலும் தெவித்துள்ளதாவது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் கிராமம், உட்கடை ஆதிதிராவிடர் மக்கள் வாழும் இருளக்குடும்பன்பட்டி கிராமத்திலிருந்து செல்லும் ஸ்ரீசெல்லாண்டியம்மன் கோவில் பாதையும் மற்றும் மயான பாதையும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் 12 வாரக் காலகெடுவிற்குள் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என தெரிவித்திருந்தும் 31வாரங்கள் கடந்தும் கடமையாற்ற வேண்டிய அதிகாரிகள் காலம் தாழ்த்தியும் தீர்ப்பை வலுவிழக்கச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் வருவாய்துறை அதிகாரிகள் கடமை தவறியபடியால் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுக்கு சம்பளம் வழங்க இந்திய சாசன அமைப்பின்படி தடைவிதிக்க வேண்டும்.

மேலும் நீதிமன்ற உத்திரவின்படி கடந்த பிப்ரவரி மாதத்தில் பழனி கிரிவலப் பாதையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. அதே பேன்று ஆயக்குடியிலும், திண்டுக்கல் பேருந்து நிலையத்திலும், ஒட்டன்சத்திரம் அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் திருமணமண்டபம் ஆகியவை வருவய்துறையினரால் அகற்றப்படும்போது மேற்படி நாளில் தேல்தல் காலம் என கூறி இருளக்குடும்பன்பட்டி கோவில் பாதை, மயானப்பாதை ஆக்கிரமிப்பினைஅகற்றாதது ஆக்கிரமிப்பாளர்களுக்கும், வருவாய்துறையினருக்கும் மறைமுக ஒப்பந்தம் ஏற்பட்டு ஆதிதிராவிட மக்களின் உரிமையை பறிக்கும் விதமாக செயல்பட்டு வருகிறது. எனவே, மாவட்ட ஆட்சியர் இது போன்ற அதிகாரிகளை கடமைத்தவறிய அதிகாரி என்று அறிவித்து 17பி சார்ஜ் செய்து பணிபதிவேட்டில் ஏற்றி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதோடு உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆதிதிராவிட மக்களை பாதுகாத்திட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

## திருவண்ணாமலை அண்ணா நகர் பகுதியில் தண்ணீர் தேங்கி

# தொற்று பரவும் அபாயம் நோய் பரவும் முன் நடவடிக்கை எடுக்குமா சம்பந்தப்பட்ட நிர்வாகம்?

### பொதுமக்கள் கோரிக்கை



திருவண்ணாமலை செப்: 6

திருவண்ணாமலை அண்ணா நகர்பகுதி 9வது தெருவில் சுமார் 400 குடும்பங்கள் வசிக்கின்றன இந்த தெருக்களில் சுற்றியுள்ள பகுதிகளில் சரிவர தார் ரோடு வசதி கிடையாது கால்வாய் வசதியும் கிடையாது இதனைச் சுற்றி பைபாஸ் சாலை அமைந்துள்ளது தண்ணீர் தேங்கி கொசுக்கள் பரவி நோய் பரவும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் இங்கு சிறுபான்மையினர் மக்கள் அதிக அளவில் வசிக்கின்றனர்

பைபாஸ் சாலையில் இருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் பேருந்துகளில் பயணம் செய்கின்றனர்

எனவே கால்வாய் வசதி ரோடு தெருருக்களில் தேங்கி நிற்கும் தண்ணீர்களை வெளியேற்றி நோய் பரவும் முன் நல்ல பாதுகாப்பு தந்திட வேண்டும் என சம்பந்தப்பட்ட நிர்வாகத்திற்கு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# வேலூர் ஊரீஸ் கல்லூரியில் ஆசிரியர் தின விழா



வேலூர், செப்.06


வேலூர் மாவட்டம் ,வேலூர் ஊரீஸ் கல்லூரி கபாலில் ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்க நிகழ்ச்சி கல்லூரியின் முதல்வர் ஜெ. ஆனி தலைமையிலும், செயலர் மாமறைதிரு எச்.ஷர்மா நித்யானந்தம் முன்னிலையில் நடைபெற்றது .உடன் கல்லூரியின் துணை முதல்வர்கள் ப.அன்பழகன், து. சத்யபிரசாத் குமார் ,நிதி ஆளுநர் எஸ் .காலேப் ,மற்றும் கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவர்கள், பலர் கலந்து கொண்டனர்.

## ...உலக செய்திகள்...

# பப்புவா நியூ கினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

பப்புவா நியூ கினியாவின் அங்கோரம் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவானது.

ஹாங்காங், பப்புவா நியூ கினியாவில் உள்ள அங்கோரம் பகுதியில் இருந்து வடக்கு வடகிழக்கே 66 கி.மீ. தொலைவில் இன்று காலை சக்தி வாய்ந்த



நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 6.33 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.2 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

10.0 கிமீ ஆழம் கொண்ட இந்த நிலநடுக்கம், 3.49 டிகிரி தெற்கு அட்சரேகை மற்றும் 144.25 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையில் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் பப்புவா நியூ கினியாவில் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. ஆனால் பொருளிழப்புகள்உள்ளிட்டபிறபாதிப்புகள்பற்றிய உறுதியான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

முன்னதாக இந்த மாத தொடக்கத்தில், பப்புவா நியூ கினியாவின் பங்குனாவில் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. நிலநடுக்கத்திற்கான தாக்கம் அதிகம் ஏற்பட கூடிய பகுதியில்பப்புவாநியூகினியாஉள்ளது.தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பெருங்கடலோர பகுதிக்கு உட்பட்ட நிலநடுக்கம் அதிகம் ஏற்பட கூடிய இடத்தில் அது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஹசீனா அமைதியாக இருப்பது நல்லது :

## இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ்

டாக்கா, வங்காளதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையில் அவாமி லீக் கட்சியின் ஆட்சி நடந்து வந்தது. இந்நிலையில், அரசு வேலைகளில் இடஒதுக்கீடு விவகாரம் வன்முறையாக வெடித்தது. இதற்கு எதிராக கடந்த ஜூலையில் தொடங்கிய மக்கள் போராட்டம் பல வாரங்களாக தொடர்ந்து நீடித்தது.

இந்த சூழலில், பிரதமர் பதவியை ராஜினாமா செய்தஷேக்ஹசீனா,நாட்டைவிட்டுவெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதனால்



ஆட்சியை கைப்பற்றிய ராணுவம், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசை அமைத்தது.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து அரசியல் கருத்துகளை சேக் ஹசீனா கூறுவது நட்புறவை பாதிக்கும் செயல் என்று வங்காளதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் கூறியுள்ளார். இதுதொடர்பாக யூனுஸ், டாக்காவில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

வங்காளதேசம் இந்தியாவுடன் வலுவான உறவுகளை மதிக்கிறது. ஹசீனாவின் நிலைப்பாட்டில் யாரும் திருப்தி இல்லை, ஏனென்றால் அவர் பேசுவது பிரச்சனையாக இருக்கிறது. அவர் அமைதியாக இருந்திருந்தால், நாங்கள் மறந்திருப்போம்; மக்களும் மறந்து இருப்பார்கள். ஆனால் அவர் இந்தியாவில் அமர்ந்து கொண்டு பேசுகிறார், இது யாருக்கும் பிடிக்கவில்லை.

இது எங்களுக்கும் இந்தியாவுக்கும் நல்லதல்ல. இது அசவுகரியமாக உள்ளது. மக்கள் எழுச்சி மற்றும் மக்களின் கோபத்தைத் தொடர்ந்து அவர் தப்பி ஓடிவிட்டார். அட்டூழியங்களுக்கு எதிராக வங்காளதேச மக்களுக்கு நீதியை உறுதிப்படுத்த இடைக்கால அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும், அதற்காக அவர் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்.

அவரை திரும்ப அழைத்து வர வேண்டும், இல்லையெனில் வங்காளதேச மக்கள் நிம்மதியாக இருக்க மாட்டார்கள். அவர் செய்த அட்டூழியங்கள், இங்குள்ள அனைவர் முன்னிலையிலும் விசாரிக்கப்பட வேண்டும்.

இந்தியாவுடன் நல்லுறவுவையே வங்காளதேசம் விரும்புகிறது. ஆனால் ஹசீனாவின் தலைமை மட்டுமே நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துகிறது என்ற கதையை இந்தியா கைவிட வேண்டும் . வங்காளதேசம் மற்ற தேசங்களைப் போலவே மற்றொரு அண்டை நாடு. இந்தியவங்காள உறவுகளை மேம்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் .

இவ்வாறு அவர் கூறினார்.

# அத்திப்பட்டு புது நகரில் ஈரோடெஃப் புதிய டீசல் வெளியேற்ற திரவ நிலையம் திறப்பு



பொன்னேரி,செப்.6

திருவள்ளூர் மாவட்டம்,அத்திப்பட்டு புது நகரில் ஈரோடெஃப் புதிய டீசல் வெளியேற்ற திரவ நிலையம் திறக்கப்பட்டது.

டீசல் என்ஜின்கள் மற்றும் சுற்றுச்சூழலில் அவற்றின் தாக்கம், பெட்ரோல் என்ஜின்களுக்கு மாறாக, மானுடவியல் காலநிலை மாற்றத்திற்கான காரணமான கரியமில வாயு அதிகரிப்பினை கட்டுப்படுத்தும் விதத்தில் டீசல் வெளியேற்ற திரவம் தற்போது நடைமுறையில் உள்ளது. இதன் மூலம் மாசுவை கட்டுப்படுத்தும் விதத்திலும் கரியமில வாயுவை கட்டுப்படுத்தும் விதத்திலும் வாகனங்களை இயக்க முடியும் இதற்கான நிலையம் அத்திப்பட்டு புது நகரில் புதிதாக திறக்கப்பட்டது.

திமுக திருவெற்றியூர் பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.மா.அருள்தாசன்,சென்னை வடக்கு மாவட்ட வியாபாரிகள் சங்கத் தலைவர் ரியாசுதீன்,ஏ.ஜி.எஸ் எண்டர்பிரைசஸ் வெளியீட்டாளர் கிரிஜா கமலேஸ்வரி ஆகியோர் நிலையத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை நிறுவன உரிமையாளர் எம்.வஜ்ரவேல் ஏற்பாடு செய்தார்.பின்னர் டீசல் வெளியேற்ற திரவம் ஏற்ற தயார் செய்யப்பட்ட வாகனங்களுக்கு திரவம் நிரப்பப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

## அகில இந்திய வ.உ.சி பேரவை சார்பாக

# ஆற்காடு அண்ணாசிலை அருகில் வ.உ.சி. 153 வது பிறந்தநாள்விழா

ராணிப்பேட்டை, செப்.06

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகரில் கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மல் ஐயா வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் 153 வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாட பட்டது.



உடன் ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தலைவர், K.M. சீனிவாசன் தலைமையில் வணிகர்கள் கலந்து கொண்டு சிறப்பாக கொண்டாடப் பட்டது,

அதை தொடர்ந்து வேலூர் மெயின் ரோடு அண்ணா சிலை அருகில் வ உ சி படத்திற்கு மரியாதை அளிக்கப்பட்டு 500 நபர்களுக்கு மேல் அன்னதானம் மற்றும் மர கன்றுகளும் வழங்கப்பட்டது

சிறப்பு விருந்தினராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர், ஜெ.எல் ஈஸ்வரப்பன், பொன். ராஜசேகர் ராணிப்பேட்டை மாவட்டம் வணிகர் சங்க தலைவர் கு.சரவணன், பாஸ்கர்,சக்சஸ் சந்திரமோகன்,இந்து முன்னணி மாவட்ட அமைப்பாளர் T.V. ராஜேஷ், V.விஜயகுமார் Mc, P.ஆனந்தன் MC,மாரியப்பன் செந்தில் குமார் இந்து முன்னணிASV. ராஜேஷ் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆனந்தன் ஸ்டேஷன், கலசம் பாலாஜி, தங்க பாண்டியன், சத்யநாராயணன், பொறிக் கடை பழனி, மற்றும் பலசரக்கு வியாபாரி சங்கம் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில்

# தொற்று நோய் பரவாமல் பொதுமக்களை பாதுகாக்க உணவு பாதுகாப்பு அலுவலரை நியமிக்க வேண்டும்

## தேசிய ஊழல் எதிர்ப்பு கழக மாநில அமைப்புச்செயலாளர் வலியுறுத்தல்

ஒட்டன்சத்திரம் செப்.6

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களுக்கு தொற்று நோய் கொள்ளை நோயாக மாறாமல் இருக்க அரசு உணவு பாதுகாப்பு அலுவலரை நியமனம் செய்து கலப்படங்களை கண்டறியவேண்டும் என தேசிய சட்ட உரிமைகள் கழகம், தேசிய ஊழல் எதிர்ப்பு கழகம் தேசிய, மாநிலத்தலைவர் வழக்கறிஞர் வி.கணபதி சுப்பிரமணியன் ஆலோசனைக்கிணங்க, மாநில அமைப்புச்செயலார் கே.தங்கபாண்டியன் கோரிக்கைவிடுத்துள்ளார்.



அக்கோரிக்கையில் அவர் மேலும் தெரிவிதுள்ளதாவது,

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் கலப்பட பொருட்களுடன் டீ, காபி, உணவு, திண்பண்டங்கள் விற்பதால் கொடிய நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சுகாதாரத்துறை கண்டும் காணாமல் உள்ளதால் பொதுமக்கள் பீதியில் உள்ளனர்.

ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய வட்டாரங்களுக்கு உணவு பாதுகாப்பு அலுவலர் நிரந்தரமாக இல்லாததால் கலப்படங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகிறது.

மேலும் மக்களுக்கு சுகாதாரம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே அரசு ஒட்டன்சத்திரம் பகுதிக்கு உணவு பாதுகாப்பு அலுவலரை நிரந்தரமாக நியமனம் செய்ய வேண்டும் தெரிவித்துள்ளார்.

# வேலூர் சத்துவாச்சாரியில் அம்மையப்பர் பிசியோதெரபி கிளினிக் திறப்பு விழா



வேலூர், செப்.06

வேலூர் மாவட்டம் ,வேலூர் சத்துவாச்சாரியில் அம்மையப்பர் பிசியோதெரபி கிளினிக் திறப்பு விழா நடைபெற்றது. ஆசிரியர் தினம் மற்றும் கிளினிக்துவக்கவிழா வினையொட்டி பள்ளி கல்லூரி மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் என அனைத்து ஆசிரியர்களுக்கும் இலவசமாக சிகிச்சைகள் மேற்கொண்டு அம்மையப்பர் பிசியோதெரபி கிளினிக் டாக்டர் எஸ். கமல்காந்த் , ஆலோசனைகள் வழங்கினர். உடன் ஜி. சேட்டு, எஸ். ஜெயந்தி ,எஸ். அச்சுதன், எம். நேமிகா, எஸ். கமலகுமார் , உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

### இந்து முன்னணி சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் விநாயகர் ஊர்வலத்தின் போது

# ஆம்புலன்ஸ் வசதி மருத்துவர்கள்மற்றும் பொது மக்களுக்கு பல்வேறு வசதிகளை செய்து தர கோரிக்கை



செங்கல்பட்டு, செப்.06

செங்கல்பட்டு மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும்கூட்டத்தில் இந்து முன்னணி சார்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம்தமிழகத்தில் இந்துக்களின் பண்டிகையான விநாயகர் சதுர்த்திமுக்கிய பண்டிகை ஆகும் கடவுள்களில் முழு முதல் கடவுளாக வழிபடக்கூடிய கடவுளாக விநாயகர் பெருமான் திகழ்கிறார் இவ்விழாவானதுஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி நாளன்று வெகு சிறப்பாக கொண்டாடப்படும் விழாவாகவிநாயகப்பெருமான் முழு முதல் கடவுளாக பிறந்ததைவிநாயகர்சதுர்த்தியாக கொண்டாடி வருகிறோம் தமிழகத்தில் பல பகுதிகளை விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு விநாயகர்சிலைகள் உரிய துறைகளிடம் அனுமதி பெற்ற இடங்களில் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு அருகில் உள்ள நீர் நிலைகள் கரைப்பது வழக்கமாக நடைபெற்று வருகிறது செங்கல்பட்டில் விநாயகர் ஊர்வலம் எட்டாம் தேதி மற்றும் 15ந் தேதி வெகு விமர்சையாக நடைபெறுவதை யெட்டி இந்து முன்னணி சார்பில் பாதுகாப்பு மற்றும் ஆம்புலன்ஸ் மருத்துவர்கள் மற்றும் ஊர்வலத்தில் பெண்கள் கலந்து கொள்ள இருப்பதால் பெண்களுக்கு ரெடிமேட் கழிப்பறை வசதி செய்து கொடுக்கும்படி இந்து முன்னணிமாநில தலைவர்காடேஸ்வராசுப்பிரமணியம் அவர்களின் அறிவுறுத்தலின்படி செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் பாலசுப்ரமணியம் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்தில் கோரிக்கை மனுவை இந்து முன்னணி சார்பாக மாவட்ட ஆட்சியர்அவர்களிடம் மனுவை அளித்தனர் மாவட்ட ஆட்சியர் கோரிக்கைகளை பரிசளிப்பதாக உறுதி அளித்துள்ளார் .

இந்நிகழ்ச்சியில்செங்கல்பட்டு தெற்கு மாவட்ட இந்து முன்னணி நிர்வாகிகள் பிகே. அன்னை ராஜு மாவட்ட பொதுச்செயலாளர் என் மணிகண்டன் காஞ்சி கோட்டை செயலாளர் ஆறுமுகம்இந்து ஆட்டோ முன்னணி மாநில செயலாளர் அனைவரும் உடன் இருந்தனர்



கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியம், மேலூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

### 2024_25ஆம் ஆண்டிற்கு, சிவகங்கை மாவட்ட அளவில்

# பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு முடிய பயின்று வரும் மாணாக்கர்கள் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம் – மாவட்ட ஆட்சித்தலைவர்

சிவகங்கை, செப்.06

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் உள்ள கருத்துகளை மாணவ மாணவியர் அறிந்து கொண்டு கல்வி அறிவுடன் நல்ல ஒழுக்கம் மிக்கவர்களாக விளங்கச் செய்யும் வகையில் 1,330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் திறன்பெற்ற பள்ளி மாணவ மாணவியருக்கு ரூ.15,000/பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2024_25ஆம் ஆண்டிற்கு சிவகங்கை மாவட்ட அளவில் பள்ளிகளில் (அரசு / தனியார் / பதின்ம / நிதியுதவி பெறும் பள்ளிகள்) (1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு முடிய) பயின்று வரும் மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம்.



மேலும், முற்றோதலில் பங்கேற்கும் மாணவ மாணவியர் 1,330 குறட்பாக்களையும் ஒப்புவிக்கும் திறன் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். திருக்குறளில் உள்ள இயல் எண், அதிகாரம், குறள் எண், குறளின் பொருள், திருக்குறளின் அடைமொழி, சிறப்புகள், சிறப்புப் பெயர்கள், உரை எழுதியோர் போன்றவற்றை அறிந்திருந்தால் கூடுதல் தகுதியாகப் கொள்ளப்பெறும்.

முற்றோதலில் பங்கேற்கும் மாணவ மாணவியர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள திறனறி குழுவின் முன்னிலையில் நேராய்வுக்கு உட்படுத்தப்பட்டு குறள் பரிசுக்குரியோர் பட்டியல் சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநரால் பரிந்துரைக்கப்படும். ஏற்கனவே இம்முற்றோதலில் பங்கேற்று பரிசு பெற்றவர்கள் மீண்டும் பங்கேற்க இயலாது.

திருக்குறள் முற்றோதலில் பங்குபெறுவதற்கான விண்ணப்பங்களை சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும்,விவரங்களுக்கு 04575241487 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். முழுமையாக நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்களை மாணவ மாணவியர் 30.11.2024 ஆம் நாளுக்குள் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை 630 561, சிவகங்கை மாவட்டம் (tamilvalarchithurai2014@gmail.com) என்ற முகவரியில் கிடைக்கப்பெறும் வகையில் நேரிலோ அல்லது அஞ்சல்வழியாகவோஅனுப்பி வைத்தல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

### திருவண்ணாமலையில் பேட்ஸ் தொண்டு நிறுவனம் சார்பில்

# சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் 136 ஆம் ஆண்டு பிறந்தநாள் முன்னிட்டு ஆசிரியர் தின விழா

திருவண்ணாமலை செப்: 6

திருவண்ணாமலையில் பேட்ஸ் தொண்டு நிறுவனம் சார்பில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரப்பிள்ளை 152 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவும் முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் 136 பிறந்தநாள் விழாவும் ஆயுள் காப்பீட்டு கழக முகவர் தினம் பாவலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரைசிறப்பாக பணி செய்து ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது,



இந்த விழாவிற்கு வாசகர் வட்ட தலைவர் வாசுதேவன் தலைமை தாங்கினார், முதுகலை ஆசிரியர் சங்க மாநில தலைவர் செல்வராஜ் முன்னிலை வகித்தார், அகவை முதிர்ந்த தமிழர்கள் சங்க செயலாளர்துரைமுருகன், வ.உ. சிதம்பரப்பிள்ளை , சர்வ பள்ளி டாக்டர் ராதா கிருஷ்ணன் படத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியை மகரிஷி வித்யா மந்திர் முதல்வர் அனிதாராம் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார், பல்வேறு துறைகளில் பணிபுரிந்து சாதனைபடைத்தவர்களுக்கு வருடம் தோறும் பேட்ஸ் தொண்டு நிறுவனம் பெருமைப்படுத்தும் வகையில் விழா கொண்டாடப்பட்டு வருகிறது சுமார் 150 க்கும் மேற்பட்ட கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிள்ளை விருதும் முன்னாள் குடியரசு தலைவர் சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதும் வழங்கப்பட்டது அதனைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கு மின்சாரத்துறை ஓய்வு கோவிந்தசாமி அனைவருக்கும் பரிசுகளை பரிசுகளை வழங்கினார், இந்நிகழ்ச்சியில் பாரதியார் தமிழ் சங்கம் தலைவர் துரைமுருகன், தொழிலதிபர்செந்தில்குமார், விலங்கியல் ஆசிரியர் பூவனக்குமார் எல்ஐசி சக்திவேல் எஸ் ஆர் ஜி டி எஸ் முதல்வர் மேகலா, வேளானந்தல் அரசு உயர்நிலைப் பள்ளி சமூக அறிவியல் ஆசிரியர் அமுதா, ஆசிரியர் சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்,விழாவில் பள்ளி மாணவ மாணவிகள் பல்வேறு துறை சார்ந்த பணியாளர்கள் ஆசிரியை, ஆசிரியர்கள், கலந்து கொண்டனர். விழாமுடிவில் பேட்ஸ் தொண்டு நிறுவனர் பால சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

# சினிமா செய்திகள்



## 'டாக்சிக்' படப்பிடிப்பை தொடங்கினாரா நயன்தாரா? வைரலாகும் புகைப்படம்

நயன்தாரா புகைப்படம் இணையத்தில் வைரலானது. சென்னை, 'ஐயா' திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான நயன்தாரா தொடர்ந்து 20 வருடங்களுக்கும் மேலாக திரைத்துறையில் இருக்கிறார். தமிழ் திரையுலகில் பெண் சூப்பர் ஸ்டாராக கொடி கட்டி பறக்கும் நயன்தாரா 'ஜவான்' படத்தில் ஷாருக்கானுடன் நடித்து இந்தியில் அறிமுகமானார்.

இந்த படம் ரூ.1,000 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை நிகழ்த்தியதோடு நயன்தாராவை இந்தி ரசிகர்கள் மத்தியிலும் பிரபலமாக்கியது.

தற்போது, யாஷ் நடிக்கும் ''டாக்சிக்' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில், நயன்தாரா புகைப்படம், ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் இது 'டாக்சிக்' படப்பிடிப்பு குறித்த அப்டேட் என்று கருத்து பதிவிட்டு வருகின்றனர். ஆனால், அது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் தயாரிப்பு நிறுவனம் சார்பில் வெளியாகவில்லை. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, நயன்தாரா நடிப்பில் இரண்டு படங்கள் வெளியாக உள்ளன. மாதவன், சித்தார்த், மீரா ஜாஸ்மின் நடித்துள்ள 'டெஸ்ட்' படமும்,




'மன்னாங்கட்டி சின்ஸ் 1960' படமும் விரைவில் திரைக்கு வர உள்ளன. மலையாளத்தில் நிவின் பாலியுடன் 'டியர் ஸ்டூடண்ட்ஸ்' படத்தில் நயன்தாரா நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.





## 'தி கோட்' வெளியீடு: முதல் ஆளாக வாழ்த்திய அஜித்!

நடிகர் விஜய்யின் 'தி கோட்' பட வெளியீட்டை முன்னிட்டு படக்குழுவினருக்கு அஜித் வாழ்த்து தெரிவித்துள்ளார். வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய், பிரபுதேவா, பிரசாந்த், சிநேகா, மோகன், மீனாட்சி சௌத்ரி உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'தி கோட்'. ஏஜிஸ் நிறுவனம் தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு யுவன் இசையமைத்துள்ளார். பெரும் எதிர்பார்ப்புடன் வெளியாகியுள்ள இந்தப் படத்துக்கு திரையுலகினர் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, இயக்குநர் வெங்கட்பிரபுவுக்கு தொலைபேசி வாயிலாக வாழ்த்து தெரிவித்துள்ளார் அஜித். இது குறித்து தனது பதவில் வெங்கட்பிரபு "நன்றி தல. விஜய் அண்ணாவுக்கு, எனக்கு மற்றும் 'தி கோட்' படக் குழுவினருக்கு முதல் ஆளாக வாழ்த்து தெரிவித்த ஏ.கேவிற்கு நன்றி. நாங்கள் அனைவரும் உங்களை நேசிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

முன்பாக 'தி கோட்' படத்தின்பாடலை பார்த்துவிட்டு அஜித் பாராட்டியது உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை பேட்டிகளில் வெங்கட்பிரபு கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வந்தாச்சி புது பிக்பாஸ் 8வது சீசனை தொகுத்து வழங்கும் நடிகர் விஜய் சேதுபதி

உலகளவில் பிரபலமான பிக்பாஸ் நிகழ்ச்சி, இந்திய மொழிகளிலும் நடைபெற்று வருகிறது. தமிழில் பிரபல தொலைக்காட்சியில் 2016 ம் ஆண்டு முதல் ஒளிபரப்பாகி வந்த பிக்பாஸ் நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வந்தார். வெறும் பொழுதுபோக்கு அம்சத்திற்காக இல்லாமல் பல சினிமா அனுபவங்களையும் புத்தகங்களையும் தொடர்ந்து அறிமுகப்படுத்தினார்.




தொகுப்பாளராக கடந்த 7 ஆண்டுகளாக பொறுப்பு வகித்த பிக்பாஸ் நிகழ்ச்சியிலிருந்து விலகுவதாக சமீபத்தில் கமல்ஹாசன் அறிவித்தார். இதனையடுத்து, கமல்ஹாசனுக்கு பதில் யார் பிக் பாஸ்' நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார் என ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில், பிக் பாஸ் 8வது சீசனை நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்க உள்ளார். பிக் பாஸ் 8வது சீசனின் டீசரரை வெளியிட்டு இதனை அறிவித்துள்ளனர்.

முதல் முறையாக விஜய் சேதுபதி பிக் பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க உள்ளதால் பிக் பாஸ் 8வது சீசன் மீதான எதிர்பார்பபு ரசிகர்களிடையே அதிகமாக உள்ளது.

உள்ளாட்சி சாரல் நாளிதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பத்திரிகை பதிவு மற்றும் புத்தக சட்ட விதிகளின்படி உள்ளாட்சி சாரல் நாளிதழின் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது என்பதை அறியவும்.

Printer, Owned and Published by M.Kaliammal, Printed at Annai Abirami Achagam, No.24, Venguchetty Street, Punga Nagar, Chennai - 600 003, and Published from No. 15, Sathiyamurthy Street, Korukkupettai, Chennai - 600 021. Editor: M. Kaliammal.